# சுகர்ணேவைபதவி நீக்குக: இந்தோனேஷிய பாராளுமன்றம் கோரிக்கை

*
Registered as a News papar in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 9 [11-2-67] இதழ் 1
பரபவ தை 29 ஷவ்வால் 30 சனிக்கிழமை

**ஜாகர்த்தா, பெப். 10 இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவை அதிபர் பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டுமென்று இந்தோனேஷிய பாராளுமன்றம் கோரியுள்ளது.**

அதிபர் சுகர்ணேவை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று கோரும் பிரேரணை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட பொழுது இப்பிரேரணை எந்த விதமான விவாதமுமின்றி ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. பாராளுமன்றத்தின் தீர்மானம் இப்பொழுது ''ஆட்சி சபை'' யான மக்கள் ஆலோசனை காங்கிரஸிடம் சமர்ப்பிக்கப் படும்.

1965-ம் ஆண்டு அக்டோபரில் தோல்வியுற்ற திடீர் புரட்சியில் அதிபர் சுகர்ணேவுக்குள்ள பங்கு குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் பாராளுமன்றம் கோரியுள்ளது.

மக்கள் ஆலோசக காங்கிரஸ் அடுத்த மாதம் கூடும் பொழுது சுகர்ணேவின் பதவிக் காலம் குறித்து இறுதி முடிவு செய்யும்.

## அனில் முனசிங்கா அப்பீல் தள்ளுபடி

கொழும்பு, வெள்ளி

அகலவத்தைத் தொகுதியில் திரு. அனில் முனசிங்கா எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டது செல்லுபடியாகாதெனக் கீழ்க்கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து திரு. அனில் முனசிங்கா செய்துகொண்ட அப்பீல் மனுவை இன்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தள்ளுபடிசெய்தனர்.

# சதி வழக்கில் மூவர் விடுதலை

## குற்றச்சாட்டை நிரூபிக்க சாட்சியமில்லை

கொழும்பு, வெள்ளி

**பெப்ரவரி 17 புரட்சிச்சதிவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எதிரிகளில் மூவர்இன்று விடுதலை செய்யப்பட்டனர். 26, 27, 28ம் எதிரிகளே இன்று விடுதலை செய்யப் பட்டவர்களாவர்.**

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகவும் மந்திரிகள் சிலரையும் இடதுசாரித் தலைவர்கள் சிலரையும் கொலைசெய்யத் திட்டமிட்டதாகவும் குற்றஞ்சாட்டி ஞானசிகதேரோ முன்னுள் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உடுகம உட்பட ராணுவம் மற்றும் உயர்தர பதிவிவகித்தவர்கள் 29பேர்மீது தொடரப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி.ஜி.எஸ்.டேவிட் முன்னிலையில் இன்று மீண்டும்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கொழும்பு பிளாக்ஸ்டார்ப் வீதியிலுள்ள கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் அமைந்துள்ள நீதிமன்றத்தில் இன்றுகாலை சதிவழக்கு விசாரணை ஆரம்பமானதும் 26,27,28ம் எதிரிகளுக்கெதிராக போதிய சாட்சியங்கள்கிடைக்கவில்லையென்றும் அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கான சாட்சியங்கள் உருவாகவில்லையென்றும் முடிக்குரிய தரப்பினர் எடுத்துக் கூறினர்.

இதை ஏற்றுக்கொண்ட கொழும்பு பிரதம நீதிபதி திரு.பி. ஜி. எஸ். டேவிட், டென்னிஸன் சொய்சா, கே. ஞானபாலா, பி. டி. நந்தபாலா என்னும்மூன்று எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

''சாட்சிகள் தங்கள்சாட்சியங்களை முரண்பாடாக அளிப்பது வேடிக்கையாக இருக்கியது. இது உங்களுக்கும் [எதிரிகளுக்கும்] அவர்களுக்கும் [சாட்சிகளுக்கும்] தான்தெரியும்'' என்று மாஜிஸ்டிரேட் குறிப்பிட்டார்.

# பெல்மதுளை எம். பி. தெரிவு செல்லாது

கொழும்பு, வெள்ளி

பெல்மதுளைத் தொகுதியிலிருந்து திரு. டபிள்யு. ஏ. கருணுசேன பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று தேர்தல் ஆட்சேபமனுவை விசாரணை செய்த நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

திரு. டபிள்யு. ஏ. கருணுசேன பெல்மதுளைத் தொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்கவேண்டுமெனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுமீது நடைபெற்ற விசாரணையின் முடிவில் ஆட்சேபமனுவை ஏற்றுக்கொண்ட நீதியரசர் திரு. கருணுசேனவின் தேர்தல் செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளித்தார்.

திரு. கருணுசேன தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட திருமதி சீதா மொலமுரே செனவிரத்ன பற்றி அவதூருகப் பேசினுரென்ற குற்றச்சாட்டு ருசுவாகியிருப்பதாகவும், மற்றைய இரு குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லையென்றும் நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கை நீதிபதி திரு. ஜி. பி. ஏ. சில்வா விசாரணைசெய்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் திரு. கருணுசேன, பார்லிமெண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதுவரை பதவி இழந்துள்ள எம். பி.க்களில் இவர் 7வது நபராவார்.

# பல்கலைக்கழக மாணவருக்கு நிதி

## சுவீப் நடத்த தேசீய கல்விச்சபை யோசனை

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களிலும் கல்விகற்றுவரும் பன்னீராயிரம் மாணவர்களில் எண்ணுயிரத்துநானூறுபேர் தங்கள் பல்கலைக்கழகப் படிப்புச் செலவுக்குப் பணமில்லாது பல்கலைக்கழகங்களின் உதவியைநாடியிருக்கின்றனர். இவர்களில் சிலருக்குப் பல்கலைக்கழகங்கள் உதவியளித்து வருகின்றன. இந்த உதவியும் போதாது.

பல்கலைக் கழகங்களில் கல்விபயிலும் மாணவர்கள் பலருக்கும் உதவிஅளிப்பதற்கு பல்கலைக்கழக நிதியை அதிகரிப்பதென்று உயர்கல்விக்கான தேசியசபை தீர்மானித்துள்ளது. இதற்கென தனியாக ஒரு நிதியை ஆரம்பிப்பதற்கு சுவீப் நடத்தலாமென்றும் கொடித்தினம் ஒழுங்கு செல்லாமென்றும் தேசீயகல்விச்சபைத்தலைவர் டாக்டர்ஜி.பி. மலலசேகரா யோசனை தெரிவித்திருக்கிருர்.

பல்கலைக்கழகங்களின் நிதி உதவிபெறும் மாணவர்கள் தவிர 1965ம் ஆண்டு ஜனவரிமாதத்திலிருந்து 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை மக்கள்வங்கியிலிருந்து 2,372 மாணவர்கள் சுமார் 40 லட்சம் ரூபா வரையில் [illegible] கின்றனர்.

ஓ ஞ வில்

# அணு ஆயுத இரகசியங்கள் திருடப்பட்டன

## உயர் அதிகாரிகள் கைது

டோக்கியோ, பெப். 10

சீன அணு ஆயுத இரகசியங்களைத் திருடிய குற்றத்துக்காக சீன இரசாயன தொழிற்சாலையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைத்துப்பாக்கிகளும் மற்றும் பலரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள், அணு ஆயுத இரகசியங்களை வேறு வெளிநாடுகளுக்கு கொடுத்துள்ளனரா என்பது குறித்து இப்பொழுது தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருவதாக பீகிங்கிலுள்ள [illegible] கியோ நிருபர் [illegible] துள்ளார்.

# இன்று வெலிமடை உபதேர்தல்

கொழும்பு, வெள்ளி

வெலிமடைத்தொகுதியில் நாளை [சனிக்கிழமை] தேர்தல் நடைபெறுகின்றது. இந்தத்தொகுதியில் 21,562 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் இருக்கிருர்கள். இவர்களில் கணிசமான அளவு தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் அடங்குவர். கடந்தமுறையைவிட இம்முறை இத்தொகுதியில் 1440 வாக்காளர்கள் அதிகப்படியாக உள்ளனர்.

வெலிமடைத்தொகுதியில் 29 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குக் கணிப்பு நாளை 9 மணிக்கு பதுளைக்கச்சேரியில் ஆரம்பமாகும்.

இத்தொகுதியின் தேர்தல் பிரசார வேலைகள் நேற்றுடன் முடிவுபெற்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்சார்பில் திரு. பி. ரத்ஞயக்காவும், ஐ. தே. கட்சியின் ஆதரவுடன் திரு. பேர்ஸி சமரவீரா சுயேட்சையாகவும், ஜாதிக விமுகுத்திபெரமுனையின் ஆதரவுடன் திரு. ஜேமிஸ் சில்வா சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர்.

## தெவினுவர நியமனப்பத்திரம்

தெவினுவரதொகுதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று மாத்தறைக் கச்சேரியில் தாக்கல் செய்யப்படும்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசீய சுவீப் முடிவுகள் வருமாறு.

**முதல் பரிசு:**
33 O 0896 - ரூ. 95,000

**இரண்டாம் பரிசு;**
11 D 0688 - ரூ. 38,000

**மூன்ருவது பரிசு:**
15 X 0616 - ரூ. 9,500

தலா 475 ரூபா பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| 22 X 0788 | 23 E 0117 |
| 26 A 0571 | 12 Y 0918 |
| 12 J 0462 | 04 Y 0674 |
| 19 C 0968 | 27 V 0382 |
| 33 J 0858 | 38 H 0745 |
| 09 Y 0480 | 15 G 0934 |
| 33 B 0244 | 17 W 0556 |
| 06 R 0236 | 26 T 0151 |
| 28 L 0249 | 03 X 0778 |
| 17 K 0597 | 09 D 0974 |
| 28 F 0169 | 24 M 0528 |
| 37 K 0045 | 22 B 0200 |
| 04 N 0793 | 33 M 0736 |
| 17 N 0736 | 12 K 0849 |
| 18 T 0307 | 20 V 0498 |
| 36 X 0883 | 32 V 0978 |
| 36 N 0044 | 16 F 0728 |
| 13 W 0347 | 09 Y- 0648 |
| 26 K 0046 | 22 U 0645 |
| 24 R 0144 | 32 Q 0053 |
| 17 P 0416 | 03 E 0892 |
| 22 P 0332 | 34 M 0347 |
| 27 P 0609 | 11 S 0961 |

8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வரகு:

60 புசல் வரகு விற்பனைக்குண்டு. விலை நிதானம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1528

### தேவை

பட்டதாரி:

தூய கணிதம் [Maths] படிப்பிப்பதற்கு பட்டதாரி [B. Sc.] உடனே தேவை. யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம். 1526

வாலிபர்கள்:

கொக்குவில் கே.கே.எஸ். ரோட், பரணி ஸ்ரூடியோவுக்கு படித்த 20 வயதுக்குட்பட்ட வாலிபர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். கொக்குவில், தாவடி, இணுவில், கோண்டாவில், திண்ணவேலி ஆட்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். 2340

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்:

மோட்டார் டிரக்டர், டீசல் மெக்கானிக் பாடங்கள் நவீன முறையில் ஆறு [6] மாத காலத்தில் முழு நேரப் பயிற்சி அளிக்கப்படும். விபரங்கட்கு 20-2-67 க்கு முன் விண்ணப்பிக்கவும் அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். INSTRUCTOR, ஸ்ரீ விக்னேஸ்வரா மோட்டார் ஸ்ரோஸ், 8/4, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1525

# சென்.பட்றிக்ஸிடம் மகாஜனு இனிங்ஸால் தோல்வி

## சந்தியாகோ 122 ஓட்டங்கள் எடுத்தார்; பெனடிக்; லூயிஸ் அபாரபந்து வீச்சு

யாழ்ப்பாணம், சனி

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸாலும் 147 ஓட்டங்களாலும் மகாஜனக் கல்லூரியை வெற்றியீட்டியது.

இப்போட்டியில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 7 விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 301 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தியாக்கோ 122 ஓட்டங்களும், வருணகுலசிங்கம் 44 ஓட்டங்களும் வன்னியசிங்கம் 18 ஓட்டங்களும், பீரிஸ் 18 ஓட்டங்களும், பெனடிக்ற் 25 ஓட்டங்களும், குலநாதன் 28 ஓட்டஙகளும், பீல்த்மன் ஆட்டத்தை இழக்காமல் 21 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் மகாஜனபந்தெறி வீரர்களான என். எஸ். சுந்தரம் 83 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும், ஸ்ரீகாந்தன் 46 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

மகாஜனக்கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 46 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜகவன் 9 ஓட்டங்களும், ஸ்ரீகாந்தன் 10 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் பந்தெறி வீரரான பெனடிற் 16 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளையும், சொயீஸ் 25 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினர்.

2ம் இனிங்சில் மகாஜன துடுப்பெடுத்தாடி மொத்தம் 108 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ராஜகவன் 16 ஓட்டங்களையும், சுந்தரம் 14 ஓட்டங்களையும், செல்வறட்னம் 34 ஓட்டங்களையும், வியகுமார் 16 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் பந்தெறி வீரர்களாக பெனடிற் 35 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், லூயிஸ் 40 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

பந்தெறி வீரர் பெனடிற் இரு இனிங்ஸிலும் மொத்தம் 51 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 9 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கல்வி

வகுப்புகள்:

யாழ். கல்லூரி, 15-ம் திகதி தொடக்கம் இரா வகுப்புகள் நடத்தப்படும். தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம், கணிதம், வர்த்தகம், கணக்குப்பதிவியல், விஞ்ஞானப்பாடங்கள். 6-30 மணி தொடக்கம் 9-00 மணி வரை. 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1527

வகுப்புகள்:

சிங்களம், விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படும். விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். தயானந்த வித்தியாலயம், அளவெட்டி. தெற்கு [அருணோதயக் கல்லூரிக்கு அருகாமையில்] 1523

# யாழ். மாநகரசபை கேள்வி அறிவித்தல்

கீழே கொடுக்கப்படும் வேலைகளுக்கு 27-2-67—ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாக ரூபா 5/-ம் அவற்றிற்கெதிரே காட்டப்பட்ட தொகையை பிணைப்பணமாகவும் செலுத்தி 22-2-67 நண்பகல் 12 மணிவரை மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலைகளின் விபரம் | பிணைப்பணம் |
|---|---|
| 1. தற்காலிக மீன் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக்கடை பண்ணையில் அமைத்தல் —— | 100-00 |
| 2. யமுனா வீதியில் எஞ்சிய பாகத்துக்கு அணைச்சுவர் கட்டல்—வட்டாரம் 7 —— | 50-00 |

கட்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்.

யாழ்ப்பாணம்,
31-1-67. 2435

## பஸ்சேவை விஸ்தரிப்பு

சங்கானை, வெள்ளி

இதுகாலவரை சங்கானை ஊடாக பொன்னாலை வரை நடைபெற்ற இரட்டைத் தட்டு பஸ் சேவை நேற்று முன்தினம் தொடக்கம் காரை நகர்வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசனத் திணைக்களம் என் 263-வவுனியா உப-பிரிவில் [அ] கொத்தன் குளம் வெட்டுதல், [ஆ] வவுனியாக் குளத்திருத்த வேலைகள். இதன் முழு விபரங்களுக்கும் 10-2-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். 1881

## அறிவித்தல்

'ஈழநாடு' 8-2-67-ம் திகதிப் பத்திரிகையில் திரு. ... செல்லத்துரையால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம்; கோவிலில் இவருக்கு உரிமைகள் இருந்தால் இதனை இவர் சட்டரீதி மூலம் செய்துகொள்ளலாமென்றும், தற்பொழுது பொதுமக்களின் உதவியுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருப்பணி வேலைகளைத் தடைசெய்ய இவருக்கு உரிமையில்லையென்பதையும் பொதுமக்களுக்கு நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருப்பணிவேலைகள் முடிந்ததும் கும்பாபிஷேகம் விரைவில் பொதுமக்களால் நடாத்தப்படும்.

த. குலநாயகம்
காரியதரிசி,
சி. நாகலிங்கம்
ப. சபை உறுப்பினர்.
2434

# அரியாலை கோஷ்டிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும், இலங்கை வித்தியாலங்கார பல்கலைக்கழக உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் 4—1 கோல்களால் வெற்றி யீட்டினர்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் சார்பில் சண்முகசுந்தரம், வாமதேவா, பஞ்சலிங்கம் ஆகியோரும் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தின் சார்பில் பெரேராவும் கோல்களை அடித்தனர். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிமைதானத்தில்நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். செல்லையா மத்தியஸ்தம் வகித்தார்.

நேற்று முன்தினம் இதே இரு கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் வித்தியாலங்கார பல்லைக்கழகக் கோஷ்டியினர் முதலாம் ஆட்டத்தில் 157 ஓட்டங்களையும், இரண்டாம் ஆட்டத்தில் 3 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 30 ஓட்டங்களையும் பெற்றனர். அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் முதலாம் ஆட்டத்தில் 148 ஓட்டங்களைப்பெற்றனர். [ந. நி.]


இன்று மட்டும்

கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | வெலிங்டன் யாழ்ப்பாணம்

எம். ஜி. ஆர்., ரத்னா,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்
மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

தொழிலாளி

12-ந் திகதி ஞாயிறு முதல்
கெபிட்டல் கொழும்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

விஜயா மட்டக்களப்பு | ஸ்ரீ கிருஷ்ணா திருமலை | விஜிதா ஹட்டன்

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ்
முதலியோர் நடிக்கும்

காக்கும் கரங்கள்



RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
நாகேஸ்வரராவ் - பானுமதி
நடித்த
கானல்நீர்



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி- வைஜயந்திமாலா
நடித்த
வஞ்சிக்கோட்டை
வாலிபன்



MANOHARA
JAFFNA
4-45, 7-00, 9-45
AGENT 3S3
PASSPORT to HELL



REGAL - JAFFNA
NOW SHOWING
Al Kauwe
Marlene Among
in
M. G. M'S
Tico and The Shark


## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில், நடைபெற்றுக் கொண்டிருக்கும் கழகங்களுக்கிடையேயான 'வீக்' சுற்றுப் போட்டியில் இதுவரை நடைபெற்று முடிவடைந்த சில போட்டிகளின் முடிவுகள் வருமாறு-

குருநகர் யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்துக்கும் சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் யுனைட்டெட் கோஷ்டியினர் சென். நீக்கலஸ் கோஷ்டியினரை 4-0 கோல்களால் வெற்றியீட்டினர்.

புனிதவான் விளையாட்டுக் கழகத்துக்கும், குருநகர் யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டியினரும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடியதால், போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி முடிவில் இருசாராரும் தலா 3-3 கோல்கள் பெற்று ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தனர்.

பாஷையூர் சென். அந்

[5ம் பக்கம் பார்க்க]

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 11 - 2 - 67

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம். 10-00 நேயர்விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவீச்சு நிறுத்தம் (வடக்குவியட்னாம்— அமெரிக்க) சமாதான பேச்சுக்கு வழிவகுக்கும்

## லண்டனில் கொஸிஜின் தகவல்

லண்டன். பெப்ரவரி 10

**வடக்கு வியட்னாமில் குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்திக்கொண்டால் அமெரிக்காவுக்கும் வடக்கு வியட்னாமுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வாய்ப்புகள் ஏற்படுமென்று ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின் இங்கு தெரிவித்துள்ளார்.**

நேற்று அவர் லண்டனில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் தான் மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

'வடக்கு வியட்னாம் கடைசியாக வெளியிட்ட அறிக்கை, சமாதானப் பேச்சுக்களில் அதற்குள்ள ஆவலைத் தெளிவாகக் காட்டுகிறது. வடக்கு வியட்னாம் வெளிநாட்டு மந்திரியின் அறிக்கையும் இதனையே வலியுறுத்துகிறது. அமெரிக்கா நிபந்தனையற்ற முறையில் குண்டு வீச்சை நிறுத்திக்கொண்டால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலைகள் உடனடியாக உருவாகும் என்றும் திரு. கோஸிஜின் தெரிவித்துள்ளார்.

## ஊடுருவலை ஹானோய் நிறுத்துமா?' —டீன்ரஸ்க்

ரஷ்யப் பிரதமரின் கருத்து குறித்து வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவிக்கையில், ஹானோய் முன் நடவடிக்கைகளைக் கையாளாதவரை அமெரிக்கா தனது குண்டு வீச்சை நிறுத்த முடியாது என்று கூறுகின்றன.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. டீன்ரஸ்க் நேற்று மாலை நிருபர்களிடம் பேசுகையில், குண்டு வீச்சை நிறுத்துவதற்கு அமெரிக்கா தயாராக நிற்கிறது. ஆனால் வடக்கு வியட்னாம் என்ன செய்யும் என்று கேட்டார்.

'வடக்கு வியட்னாம் முதலில் சமாதான நடவடிக்கை எதையும் கையாளுமானால் அமெரிக்கா நிச்சயமாகக் குண்டுவீச்சை நிறுத்தும். தென் வியட்னாமுக்கு ஹானோய் ஊடுருவல்கள் நீடிக்கும் பொழுது குண்டு வீச்சை நிறுத்துமாறு வடக்கு வியட்னாம் எப்படிக் கேட்க முடியும்'' என்றும் திரு. டீன்ரஸ்க் கூறினார்.

இதற்கிடையே வியட்னாமில் இருதரப்பினரும் போர் ஓய்வை மீறியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வியட்காங்கியருக்கும் அமெரிக்கத் துருப்புகளுக்கும் இடையே சண்டை நடந்ததென்றும் அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்னாமுக்குள் ஊடுருவின என்றும் புகார்கள் செய்யப்பட்டுள்ளன. நேற்று இரண்டு இடங்களில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது.

## பத்மநாபன்

புதுடில்லி, பெப். 10

தாய்லாந்தில் இந்தியத் தூதுவராகவிருந்த கே. வி. பத்மநாபன் ஈராக்கில் புதிய இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பூமியதிர்ச்சிக்கு 61 பேர் பலி

பொகட்டோ, பெப். 10

கொலம்பியாவின் சில பகுதிகளில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் 61 பேர் பலியானார்கள். ஏராளமானவர்கள் வீடிழந்தனர்.

## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

கரையூர் பெண்கடத்து வழக்குவிசாரணையை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் மீண்டும் இம் மாதம் 25-ம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார்.

கரையூர் இராஜேந்திரம் வீதியைச் சேர்ந்த 12 வயது யுவதியான ஆர். குணவதியை பருத்தித்துறையைச் சேர்ந்த 16 வயது இளைஞரான டேவிட்டிற்கு திருமணம் செய்துவைக்கும் நோக்கத்துடன், வசாவிளானைச் சேர்ந்த தேவசகாயம் காரொன்றில் கடத்திச் சென்றதாக கரையூர் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து மேற்படி பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு. கே. துரைசிங்கம் சந்தேக நபர்கள் இருவருடன் குணவதியையும் ஆனையிறவுக் காட்டில் வைத்துக் கைதுசெய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜார் செய்த பின்னர் டேவிட்டும், தேவசகாயமும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள். (ந. நி)

## ஹிந்தி எதிர்ப்பு வழக்கு: 138 பேருக்கு சிறை

திருச்சி, பெப். 10

கரூரில் 1965-ல் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கலவர சம்பவத்தைத் தொடர்ந்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 138 பேருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கரூர் ரயில்வே நிலையத்துக்குத் தீ வைத்ததாக 187 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 47 எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர். மொத்தமாக 914 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் உதவி மாவட்ட மாஜிஸ்திரேட் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

138 பேருக்கு தலா இரண்டு மாதம் முதல் இரண்டு வருடம்வரை கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஒருவர் தொடர்ந்து தலைமறைவாகவிருக்கிறார்.

## "இந்திய ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட அடி"

### பிரதமருக்கு கல்வீசியது குறித்து ஜயப்பிரகாஷ் கண்டனம்

பாட்னா, பெப். 10

''இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீது வீசப்பட்ட அந்தக் கல், இந்திய ஜனநாயக அமைப்பு முறைக்கு ஏற்பட்ட பயங்கர அடி'' என்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் எச்சரித்துள்ளார்.

நேற்று பாட்னாவில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில்தான் மேற்கண்ட கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் போது பலாத்காரத்துக்கு இடமிருக்க முடியாது. இதன் மூலம் வாக்காளர்களை அணுகவும் எவருக்கும் உரிமைகிடையாது. தலைகள் மோதாது தலைகளை மோதவிடாது. தலைகளை எண்ணுவது தான் ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கமாகும். காலித்தனமான முறையில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வர சிலர் நினைப்பதற்கு மக்கள் மூடர்களல்ல ''என்றும் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்துள்ளார்

பிரதமருக்கு கல் வீசிய சம்பவம் குறித்து திரு. ஆச்சார்ய கிருபளானியும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பம்பாய், பெப். 10

பம்பாய் [illegible] யர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

## நைலோன் விமான இறங்கு தளம்

லண்டன், பெப். 10

முற்றிலும் புதுரகமான நைலோன் விமான இறங்கு தளம் ஒன்றை பிரிட்டிஷ் பொறியியலாளர் உருவாக்கியுள்ளனர். இதுவிசேஷமாக இராணுவ பாவனைக்காகவே அமைக்கப்பட்டது. எனினும் தற்காலிகமான விமான தளம் தேவைப்படும் இடங்களிலும் இதனை உபயோகிக்கலாம். இதை சிலமணி நேரத்தில் அமைத்துவிடலாம். 84 சதுர அடிப்பகுதிகளாகவே இது அமைக்கப்பட்டிருக்கிறது.

தூசி, மண்நிறைந்த தரைகளிலும், விமானம் இறங்கும் போது தூசியெழுப்பி இயந்திரத்தைப் பாதித்து, பாதையை மறைக்கும் கஷ்டங்களையும் இது நிவர்த்தி செய்கிறது. இது மட்டுமன்றி சகல கால நிலைகளிலும் உறுதியுடன் இருக்கும் ஆற்றலுடையது.

## 6 மணிநேரம் வரை கணவனால் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், சனி

நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தன்னைத் தமது கணவர் தொடர்ந்து தாக்கியதாகக் காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் உரும்பராயைச் சேர்ந்த நல்லம்மா பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.

தானும் தனது கணவனான செல்லையா கந்தசாமியும் பல காலங்களாகப் பேச்சுவார்த்தையின்றி இருந்ததாகவும் ஆனால் திடீரென நேற்று முன்தினம் தனது வீட்டிற்கு வந்த தனது கணவன் தனது நகைகளையும் பொருட்களையும் விற்பதற்காகத் தரும்படி தன்னைக்கேட்டபோது தான் மறுக்கவே இருவருக்குமிடையே நடைபெற்ற வாய்ச் சண்டையைத் தொடர்ந்து தனது கணவன் தன்னை நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கையாலும் காலாலும் தாக்கியதாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பொலிஸ்நிலைய கான்ஸ்டபிள் வி. தருமன் நடத்திய விசாரணையின்போது நல்லம்மா தெரிவித்துள்ளார். இது விஷயம் உடனடியாக சுன்னாகம் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். [ந. நி.]

## நீர்சுத்திகரிப்பு நிபுணர் வருவார்

லண்டன், பெப். 10

பிரிட்டனிலிருந்து நீர் சுத்திகரிப்பு நிபுணர் ஒருவர் இம்மாத இறுதியில் கொழும்பு செல்லவிருக்கிறார். கொழும்பு தெற்கில் நிறுவப்பட்டுவரும் ரசாயன நீர் சுத்திகரிப்பு இயந்திர சாதனங்களை நேரில் அவதானிக்கும் பொருட்டே அவர் இலங்கை விஜயம் செய்கிறார். இவர் தான் திரு. டபிள்யூ. ஜி. வில்லியம்ஸ். ''பட்டர்ஸன் கன்டி'' சர்வதேச கம்பனியின் ஒப்பந்த டைரக்டரான திரு. வில்லியம்ஸ் கொழும்பில் ஒரு வார காலம்தங்கியிருப்பார்.

## புகார்

யாழ்ப்பாணம், சனி

புத்தூர் கிராமசேவையாளர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படி தீண்டாமை ஒழிப்பு மத்திய குழு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவைக் கேட்டுள்ளது.

அண்மையில் புத்தூர்க் கிராம சேவையாளர் சாதிப் பாகுபாடு காட்டி சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருடன் அநீதியான முறையில் நடந்து கொண்டதாகவும் இவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் இக்குழு அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது. [ந. நி.]

## "நாடகக்கலை தெய்வீகமானது"

கனகராயன், வெள்ளி

பண்டைக்காலந்தொட்டே நாடகக் கலையானது ஒரு தெய்வீகக் கலையாகவே கருதப்பட்டு வருகின்றது. சிவபிரானே 'நாடகத்தின் தந்தையென்று புராண வரலாறுகள் கூறுகின்றன. நாடகக்கலையை நாம் முன்னேற்ற பாடுபட வேண்டும்'' என்று வவனிக்குளம் யூனிற் உதயசூரியன் நாடகமன்றத்தின் நாடக விழாவின்போது கொலனி அதிபர் திரு. மு. மாசிலாமணி பேசுகையில் கூறினார்.

## புதிய நட்புறவு ஒப்பந்தத்துக்கு பிரிட்டனுக்கு ரஷ்யா அழைப்பு

லண்டன், பெப். 10

பிரிட்டனுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே நட்புறவு, ஆக்கிரமிப்பு — வலுத்தாக்குதல் விலக்கு ஒப்பந்தமொன்று உருவாக்கப்பட வேண்டுமென ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் கோரியுள்ளார்.

இங்கு விஜயம் செய்துள்ள ரஷ்யப் பிரதமர் நேற்று பிரிட்டனின் இரு சபைகளையும் கொண்ட கூட்டத்தில் உரைநிகழ்த்தினார். அப்பொழுது தான் ரஷ்யாவின் கோரிக்கையை விடுத்தார்.

பிரிட்டனும் ரஷ்யாவும் இப்பொழுது பல துறைகளில் ஒத்துழைத்து வருகின்றன என்று குறிப்பிட்ட திரு. கொஸிஜின் நட்புறவு ஒத்துழைப்பு அடிப்படையில் புதிய ஒப்பந்தம் அமைக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

ஐரோப்பாவைப் பாதுகாக்க வேண்டியது இப்பொழுது மிகவும் அவசியமாகியுள்ளது. ஐரோப்பாவில் இராணுவ நிறுவனங்களை முடிவுக்குக் கொண்டு வருவது பலனுள்ளதாகவிருக்கும். இதன் முதல் நடவடிக்கை வார்ஸோ, வடஅத்லாந்திக் ஒப்பந்தங்களைக் கலைக்க வேண்டும் என்று பிரதமர் கொஸிஜின் கேட்டுக் கொண்டார்.

பிரிட்டன், அமெரிக்க கொள்கைகளிலிருந்து சிறிது விலகி இருக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமதர்மமே இன்பத்துக்கு அடிப்படை. உங்களுக்குள்ளேயே உள்ள ஆனந்தமெனும் கடவுளை உணருங்கள். பின் எல்லா நன்மைகளும் இயற்கையாகவே வந்தெய்தும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA
Telegram: EELANADU J.ffna. Telephone. 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு தை 29 [11-2-67]


## நன்றியும் வணக்கமும்

இன்று உங்கள் அபிமான பத்திரிகையான 'ஈழநாடு'க்கு பிறந்த நாள். எட்டு பிராயம் நிறைந்து ஒன்பதாவது வயது ஆரம்பமாகிறது. இந்த நல்ல நாளிலே, இதுவரை தன்மீது அன்பு காட்டி ஆதரித்து வளர்த்து வந்துள்ள எல்லா அன்பர்களுக்கும், 'ஈழநாடு' தனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

சென்ற ஆண்டிலே 'ஈழநாட்டுக்கு' ஏற்பட்ட சோதனை சாதாரணமானதன்று. ஸ்தாபகரில் ஒருவரான டாக்டர் சண்முகரத்னத்தாரின் திடீர் மறைவால் ஆணிவேர் அசைந்தது. அதற்கெல்லாம் தப்பி, 'ஈழநாடு' புத்துயிர் பெற்று தொண்டாற்ற முடிகின்றதெனில், அதற்குக் காரணம் திருவருளும், அன்பர்களின் ஆதரவுமேயாகும். யாழ்ப்பாணத்திலே ஒரு தினசரிப் பத்திரிகையை நடத்துவதென்பது சுலபமல்ல. வள்ளல் ராமநாததுரையும் இது பற்றி நினைத்தாரென்றாலும், ஆரம்பிக்க அவரும் துணியவில்லையாம். முதலில் வாரப்பதிப்பாகவும், பிறகு வாரம் இருமுறையும், சென்ற ஆறு ஆண்டுகளாக தினசரியாகவும் 'ஈழநாடு' வளர்ந்து, அன்பர்களின் அமோகமான ஆசியையும் ஆதரவையும் பெற்று வளர்ந்து வருகிறதெனில் இதற்குத் திருவருள் பூரணமாகவுள்ளதென்றே நம்புகிறோம்.

'ஈழநாடு' பத்திரிகை வெறும் செய்தித்தாள் மட்டுமல்லவென்றும், இதன் வளர்ச்சியில்தான் ஈழத் தமிழர்களின் எதிர்காலமும் தங்கியுள்ளதென்றும் அனுபவம் மிக்க ஓர் ஈழப் பெரியார் அடிக்கடி கூறுவார். சமீப காலத்தில் ஈழத்திலே புதிது புதிதாக பல தமிழ்த் தினசரிகள் வெளிவந்துள்ளன. ஈழத்திலே தமிழுக்கு இடமில்லை என்று, சிங்களம் மட்டும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களே தமிழ்த் தினசரிகளைப் போட்டி போட்டுக் கொண்டு நடத்துவது விசித்திரமே. ஆனால் அவர்கள் தமிழ்பேசும் மக்களின் க்ஷேம நலன்களை உண்மையில் நாடி, அதற்காகப் பாடுபடமுடியுமா என்பதைச் சற்றே சிந்திக்கையில், 'ஈழநாடு' தன் பெரும் பொறுப்பை உணரக் கூடியதாக இருக்கின்றது.

பத்திரிகை விற்பனையைக் கூட்டுவதற்காக, தரக் குறைவான செய்திகளையும், படங்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டு, தமிழரின் உள்ளங்களை மாசுபடுத்தி, அவர்களது வாழ்க்கையையே சீர்குலைக்கச் செய்யப்படுவதாகவும், ஆனால் 'ஈழநாடு' தரத்தால் உயர்ந்து சீரும் சிறப்பும் மிக்க பத்திரிகையாக விளங்குவதாகவும், நடுநின்று செய்திகளைச் சுடச்சுடக் கொடுப்பதாகவும் பல அன்பர்கள் பாராட்டுகின்றனர். இந்தப் பாராட்டுகள் நமக்கு ஆசி போல் இருந்து இனி இப்பணியை மேன் மேலும் உற்சாகமாகச் செய்ய உதவுவதாகும்.

ஜனநாயகம் வெற்றி பெறவும், மக்கள் குறைகள் நீங்கி நல்வாழ்வு வாழவும் வேண்டுமாயின், அதற்கு, பொறுப்பான பத்திரிகைகளின் தொண்டு மிக மிக அவசியம். இதை தேசியஅரசாங்கம் உணர்ந்து, பத்திரிகைக் காகிதம், உபகரணங்கள் முதலியவற்றின் விலையைக் குறைப்பதுடன், வேறு பல சலுகைகளையும் அளிக்க வேண்டும். சிறிய பத்திரிகைகளுக்கு இந்தியாவில் அரசாங்கம் பல சலுகைகள் அளித்து ஆதரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலே தமிழ்பேசும் மக்களுக்கு இன்னும் பல சோதனைகள் காத்திருக்கின்றன. வகுப்பு வெறி சக்திகள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விஷமம் செய்துவருகின்றன. இச்சமயம் கண்ணுங் கருத்துமாக இருந்து, நாட்டில் நல்லாட்சியும், அமைதியும் நிலவவும், தமிழர் தாங்கள் இழந்த உரிமைகளைப் பெற்று சரிநிகர்சமானமாக வாழ்ந்து இந் நாட்டுக்கும் மனித குலத்துக்கும் தங்கள் பணியை உற்சாகமாகச் செய்யவும், தக்க நிலையை ஏற்படுத்த வேண்டிய பெரும்பொறுப்பை 'ஈழநாடு' நன்கு உணர்ந்துள்ளது. இப்பணியில் பொதுமக்களினதும் சிறப்பாகத் தமிழ்பேசும் மக்களினதும் அன்பும் ஆதரவும் அமோகமாகக் கிடைக்குமென்று பூரணமாக நம்பி, திருவருள் துணைநிற்க 'ஈழநாடு' புது உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், பக்தியுடனும் தொண்டாற்ற முன் நிற்கின்றது.

### பிரதமரிடமிருந்துவந்த தமிழ்க் கடிதம்

அளவெட்டி, வெள்ளி

பாராளுமன்றத்தில் தமிழ் விசேஷ சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பும், அரசாங்கத் தொடர்புகள் அனைத்தும் சிங்களத்திலேயே இருக்கின்றன. அரசாங்கத்திடமிருந்து பொதுமக்களுக்கு வரும் உத்தியோக பூர்வமான கடிதங்கள் தனிச்சிங்களத்தில் இருக்கின்றன. இதனை நிறுத்தி வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரி பிரதம மந்திரிக்கும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் இசைச் சங்க செயலாளரான, எஸ். ஆர். ஞானசுந்தரம் ஆட்சேபக் கடிதம் எழுதியதற்கு பிரதம மந்திரி இது விஷயத்தைப் பற்றிய கடிதத்தைத் தமிழில் எழுதியுள்ளார். இக் கடிதத்தில் சிங்களமும், தமிழும் இடம்பெற்றிருந்தன.

# 'ஈழத்தில் நடக்கும் கூட்டாட்சி தமிழ்நாட்டில் முடியாதா?'

## அண்ணாதுரை கேள்வி

— நமது நிருபர் —

சென்னை, பெப். 10

மேற்கு ஜெர்மனியில் பதினைந்து ஆண்டுகளும் அருகேயுள்ள இலங்கையில் முன்பும், இன்றும் வெவ்வேறு கட்சிகள் சேர்ந்த கூட்டரசாங்கம் ஆட்சி புரிய முடியுமானால் தமிழ்நாட்டில் மட்டும் கூட்டணியினால் ஆட்சி செய்ய முடியாதா? என்று தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை நேற்றிரவு சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் கேட்டார்.

நேற்றிரவு இங்கு நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் கொள்கையில்லாத கூட்டணியால் ஆட்சி நடத்த முடியாது என்று காங்கிரஸ்காரர் பேசிவரும் பேச்சுக்கு திரு. அண்ணாதுரை பதிலடி கொடுத்தார். மேற்கு ஜெர்மனியில் 15 ஆண்டுகளாக கூட்டு அரசாங்கம் நடக்கிறதென்றும், பக்கத்திலுள்ள இலங்கையில் கூட முன்பு கூட்டரசாங்கம் நடந்ததென்றும், தற்பொழுது அங்கு ஏழு வெவ்வேறு கொள்கைகளையுடைய கட்சிகளின் அரசாங்கம் நடக்கிறதென்றும், கேரளத்தில் கூட பட்டம்தாணுபிள்ளை தலைமையில் கூட்டரசாங்கம் நடந்ததென்றும், திரு. அண்ணாதுரை தெரிவித்தார். தனக்கு நிர்வாக அதிகாரம் இருக்கா இல்லையா என்பதை ஆட்சியைக் கையில் கொடுத்த பின் பார்க்கும்படி அவர் குறிப்பிட்டார். காஞ்சிபுரத்தில் வெற்றி பெற இம்முறை தம்பிமாரே போதுமென்றும் அதனால் தான் தான் தென் சென்னையில் போட்டியிடுவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் காமராஜர் கடலூரில் தேர்தல் பிரசாரம் செய்துவருகின்றார். நாட்டின் வீண் குழப்பங்களினாலும், கலவரங்களினாலும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாதென்று அவர் இங்கு ஒரு கூட்டத்தில் தெரிவித்தார். வடநாட்டில் கூட தமிழ்நாட்டு முன்னேற்றம் இல்லையென்றும் அப்படியிருந்தும் காங்கிரஸை எதிர்க்கிறார்களே என்றும் காமராஜர் கவலைப்பட்டார். காங்கிரஸ் ஒன்றினால் தான் பலமான அரசாங்கத்தை அமைக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார். நள்ளிரவு 2 மணி வரை கூட்டம் நடைபெற்றது.

சென்னையில் இப்பொழுது தினமும் ஐம்பதிற்கு அதிகமான கூட்டங்கள் நடைபெறுகின்றன. முக்கிய பேச்சாளர்கள் இரவு 11 மணிக்குப் பின்பே வருகிறார்கள். கூட்டம் 8 மணிக்கே ஆரம்பமாகிறது. கூட்டங்கள் அருகருகே நடைபெறுவதால் மக்கள் இங்குமங்குமாக அலைந்துகொண்டிருக்கின்றனர். இம்மாதம் 13-ந் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின் கூட்டங்கள் நடத்த அனுமதி கிடையாது. அதன் பின் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்பார்கள். அத்துடன் வாக்களிப்பதற்கான மற்றும் வேலைகளை கவனிப்பார்கள். இங்கு மையால் புள்ளடி போடுவதில்லை. ஒரு சீல் இருக்கிறது. அதை சின்னத்தின்மீது பொறிக்கவேண்டும்.

### கிராமசபை இலக்கிய விழா

கிளிநொச்சி, வெள்ளி

"நாட்டின் முற்போக்கு சக்திகளை பயன்படுத்தவும் மக்களின் ஆக்கத்துறைகளுக்கு ஊக்கமளிக்கவும் இதுபோன்ற இலக்கிய விழாக்களை நடத்துவதன் மூலம் பயனடையமுடியும். செல்வமாக மதிக்கப்படும் கல்வியறிவை மக்கள் மனதிலும் வாலிபர்கள் மனதிலும் பதியச்செய்யும் இந்த வாய்ப்பு இப்படிப்பட்ட விழாக்களை நடாத்துவதன் மூலமே பெறமுடியும்" என்று கரைச்சிக் கிராமசபையினால் இரண்டாவது வருடமாக நடாத்தப்பட்ட இலக்கிய விழாவுக்கு தலைமைதாங்கிப் பேசிய வடபிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. சி. மாணிக்கவாசகர் கூறினார்.

2-ம் நிகழ்ச்சிக்கு கரைச்சிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமைவகித்தார். இலக்கியப்போட்டியும், நாடகப்போட்டியும் நடாத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி மாணிக்கவாசகரும் காரியாதிகாரி இ. யோகநாதனும் [illegible] வழங்கினர்.

## ஐயாறன் எழுதுவது

"வந்து விட்டீர்களா? இனி வரமாட்டீர்கள் என்றல்லவா கேள்விப்பட்டேன்."

"யார் சொன்னது?"

"ஒரு வாரத்துக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ரயிலில் சென்றேன். என்னுடன் வந்த... அன்பர்தான் சொன்னார். தமிழகத்திலே உங்கள் தாயாருக்கு உடல் நலம் சரியில்லையாம் அதனால் அங்கு சென்றிருப்பதாயும், இனி நீங்களும் திரும்பமாட்டீர்களென்றும் அதனால் 'ஈழநாடு' பேப்பரும் அவ்வளவுதான் என்றும் சொன்னார்."

அட கடவுளே! ஐயாறன் இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி 'ஈழநாடு' நடக்கும் என்பது சென்ற சில வாரங்களில் தெரியவில்லையா?

எழுத்துக்கள் எல்லாம் தேய்ந்து படிக்கவே முடியாதபடி போயினும் கூட, நீங்கள் மிகப்பொறுமை காட்டி, ஆதரித்து வந்துள்ளதைப்பார்க்கையில், உங்களுக்கு எவ்விதம் நன்றி செலுத்துவதென்பது தெரியவில்லை. நீங்களும் உங்களது அன்பும் வாழ்க! அந்த அன்பில்தான் 'ஈழநாட்'டின் வளர்ச்சியும் இருக்கின்றது.

ஃ ஃ ஃ

பூநகரியிலிருந்துஓர் அன்பர் எழுதுவதாவது

"ஈழத்தில் வெளிவரும் நாளிதழ்களில் 'ஈழநாடு' தரத்தால் உயர்ந்து சீரும் சிறப்பும் மிக்க பத்திரிகையாகவிளங்குகின்றது. ஏனைய நாளிதழ்கள்போல் ஆபாசத்தால் விற்பனையை அதிகரிக்க முயலாது நடுநின்று செய்திகளைத் தருகின்றதுகண்டு மகிழ்கின்றோம்.

தென்னிந்தியத் தேர்தல்களில் ஈழத்தமிழர் ஆவல் கொண்டிருப்பது தடுக்க முடியாத உணர்ச்சிப்பிணைப்பால் ஏற்பட்டது. சென்னை சென்றுள்ள திரு. கா. யோகநாதனின் கட்டுரைகளை வரவேற்கிறோம். தங்கள் பெருமுயற்சியைப்பாராட்டுகிறோம். நேரிற்சென்று காணமுடியாத காட்சிகளையெல்லாம் கண்முன்னே நிறுத்தும் இந்த அரிய சேவையைத் தொடர்ந்தும் எமக்குக்கிடைக்க ஆவன செய்யும்படி தயவோடு வேண்டுகிறோம்..."

தேர்தல் முடியும்வரை திரு. யோகநாதன் தமிழகத்திலிருந்து ருசிகரமான செய்திகளை அனுப்பிவைக்க ஒழுங்குசெய்திருக்கிறோம். பின்னரும் கூட செய்திகளை அவ்வப்போது அனுப்பிவைக்க, சென்னையில் தக்க ஏற்பாடு செய்திருக்கிறோமென்பதையும்நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

"அன்பர் பணி செய்ய எமை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே"

ஃ ஃ ஃ

தமிழகத்தில் மூன்று வாரமிருந்தேன். பஞ்சம், பசி, பட்டினி என்று கேள்விப்பட்டதும், இந்த சமயத்தில் ஏன் செல்லுகிறோம் என்று கூடத்தயங்கினேன். அவசிய காரணமாகச்சென்றேன். கண்டது என்ன?

வட நாட்டிலே எப்படியோ? தமிழகத்தைப் பொறுத்தமட்டில் எங்கு பார்த்தாலும்நல்லசாகுபடி. தமிழன்னை, 'கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தந்திருக்கின்றாள். பார்த்தால் பஞ்சமிருப்பதாகச் சொல்லவே முடியாது. திருவையாற்றிலே ஓட்டலில் முன்னர் 10 அணுவுக்கு [60 சதத்துக்கு] நல்ல சாப்பாடு கிடைத்தது. இப்போது அது 12 அணா. அவ்வளவுதான். இரண்டு இட்டலி 15 சதம். [இங்கு 20 சதம்].

தமிழகத்தில் எங்காவது உணவுத்தட்டுப்பாடு இருக்கிறதென்றால் காரணம் இயற்கை அன்னை அல்ல. மனிதன் செய்ததே.

பழங்களெல்லாம் மிக மலிவு. விதவிதமான பழங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. பழங்களைச் சாப்பிட்டே பசியாறலாம் போலுள்ளது. அங்கு கண்டதையும் கேட்டதையும் பற்றி இனி எழுதட்டுமா?

ஃ ஃ ஃ

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானைப், பின்னை என் பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாந் தவிரப் பணிப்பானை, இன்னதன்மையன் என்றறிவொண்ணா எம்மானை எளிவந்தபிரானை, அன்னம் வைகும் வயற் பழனத்தணி ஆரூரானை மறக்கலுமாமே.

—சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

### ரோஜாவுக்கு ஜனாதிபதிகளின் பெயர்

புதுல்லி, பெப். 10

பாரதத்தில் மூன்று ரோஜாக்களுக்கு மூன்று தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது. மறைந்த ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் பெயர் ஒரு ரக ரோஜாவுக்கும், ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் பெயர் வேறு ஒரு ரக ரோஜாவுக்கும் உபஜனாதிபதி சாகிர் குசேனின் பெயர் மற்றொரு ரகரோஜாவுக்கும் இடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானையில்

# குழந்தைகள் பூங்காவுக்கு நிதி உதவி அளிக்குக

## விளையாட்டுப் பகுதி மந்திரிக்கு பட்டினசபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சங்கானையில் குழந்தைகள் பூங்காவென்றையும் விளையாட்டு மைதானமொன்றையும் நிறுவுவதற்கு நிதி உதவி அளிக்குமாறு தேசிய சேவைகள், விளையாட்டுப்பகுதி மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவை சங்கானைப் பட்டின சபை கோரியுள்ளது.

பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் மந்திரி சுகததாசாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், பட்டினசபை நிறுவப்பட்டு ஒன்பது வருடங்களாகியும் நிதி நெருக்கடி காரணமாக இங்கு சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானமோ அல்லது பூங்காவோ நிறுவப்பட வில்லை என்றும்இப்பகுதிக் குழந்தைகளுக்குப் பல வசதிகளைச் செயது கொடுக்கச்சபை விரும்பிய போதிலும் நிதியில்லாத காரணத்தினுல் எந்தத்திட்டத்தையும் செய்ல்படுத்த முடியாமலிருக்கிறதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வசதிகளின்றிக்கஷ்டமுறும் குழந்தைகளுக்கு ஒரு பூந்தோட்டத்தையும் விளையாட்டு மைதானத்தையும் நிறுவிக் கொடுக்க, காலதாமதமின்றி நிதி வழங்குமாறும் பட்டினசபைத் தலைவர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

# கடலரிப்பு அதிகரிப்பு

வெள்ளவத்தை, வெள்ளி

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளின் கடற்கரையோரங்களில் கடலரிப்பின் காரணமாக மண் மேடுகள் ஏற்பட்டுள்ளன. புகையிரத நிலையங்களை அடுத்துள்ள பகுதிகளில் இக் கடலரிப்புக் கூடுதலாக ஏற்பட்டுள்ளது.

இவ்வரிப்பைத் தடுப்பதற்கு அதிகளவு கருங்கற் பாறைகளை அரசாங்கம் போடவேண்டும் என்றும் அரசாங்கம் இதில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வெள்ளவத்தை உயிர் பாதுகாப்புச் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட...

[2-ம் பக்கத் தொடர்ச்சி[

தனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் யுத்கவுன்சில் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற 'பி' பிரிவு மோதலில் கடுமையான போட்டியின் பின்னர் பாஷையூர் வெற்றியீட்டியது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் இருசாராரும் நன்ருக ஆடினர். இதனுல் இடைவேளைக்கு முன் ஒருவருமே கோல்கள் போடவில்லை. இடைவேளைக்குப்பின் நடைபெற்ற ஆட்டத்தில் குருநகர் ஒரு கோலும் பாஷையூர் இரு கோலும் பெற்றன. இப் போட்டி முடிவில் பாஷையூர் சென். அந்தெனிஸ் கோஷ்டி குருநகர் யுத்கவுன்சில் கோஷ்டியை 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

வை. எம். ஜி. விளையாட்டுக் கழகத்துக்கும் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற 'பி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் வை. எம். ஜி.கோஷ்டியினரைத் தோற்கடித்தது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் வை. எம். ஜி. கோஷ்டியினர் இரு கோல்களும், கிறின்பீல்ட் கோஷ்டியினர் இரு கோல்களும் முறையே பெற்றனர். இப்போட்டி முடிவில்கிறீன்பீல்ட்கோஷ்டி 3-2 கோல்களால் வை. எம். ஜி. கோஷ்டியைத் தோற்கடித்தது.

## புளூஸ் வெற்றி

வல்வெட்டித்துறை, வெள்ளி

பலாலி பயிற்சிக கலாசாலை பயிற்சி மாணவ விளையாட்டுக் கழகத்திற்கும் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்குமிடை யேநடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வல்வை புளூஸ் [1-0] வெற்யீட்டியது. இப் போட்டிக்கு திரு. முருகப்பா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டிக்கருகிலுள்ள கொம்மன்தறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லக்கண்டு என்பவர் வேலுப்பிள்ளை இராசா என்பவருக்கு கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால்குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளைய பெருமாள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு கையடையாளம் கொடுக்கும்படியும் 150 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். எதிரிக்கு உதவியளித்ததாக மற்றும் சகோதரர்இருவரையும் குற்றவாளியாகக் கண்டு அவர்களையும் தலா 150 ரூபா பிணையில் செல்லுமாறும் தீர்ப்பளிப்பதற்கு எதிரிகள் மூவரையும் இம்மாதம் 18-ந் திகதி மீண்டும் கோட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

## கிணற்றில் தவறி விழுந்து மரணம்

சங்கானை, வெள்ளி

சங்கானை மாலியவத்தையில் நான்கு குழந்தைகளின் தாயாரான குலரத்தினம் சிவபாக்கியம் என்னும் 35 வயதுடைய பெண் கிணற்றில் விழுந்து இறந்த பரிதாப சம்பவமொன்றுநேற்று நடைபெற்றது.

சிவபாக்கியம் கிணற்றில் தண்ணிர் அள்ளியபோது தவறி விழுந்தார் என்றும் கடைக்குச் சென்றிருந்த மூத்த மகன் வீடு திரும்பிய பின் தயாரைக்காணுது எங்கும் தேடி சந்தேகம் கொண்டு உறவினர் உதவியுடன் கிணற்றில் தடி கொண்டு தேடியபோது சீலை தடியில் சுற்றியதைக் கண்டு சிவபாக்கியத்தை வெளியில் எடுத்தனர் என்றும், அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. சங்கானைப் பொலிசார் ஸ்தலத்தில்விசாரணை நடத்தினர். டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினுர். மரணவிசாரணை நடாத்திய திரு.கே. குமரகுரு சாட்சியங்களைப் பதிவு செய்தபின் நீரில் மூச்சுத்திணறியதால் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்புக் கூறினுர்.

## "முயற்சி வெற்றிதரவேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் சரசாலை அரசினர் தமிழக்கலவன் பாடசாலையில் திரு. சி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னுள் செனட்டர் திரு. ஞா. நல்லையா பேசுகையில், அரசாங்க அதிபரின் முயற்சி பலனைத் தராவிட்டால் நிச்சயம் சத்தியாக்கிரகம் நடந்தேதீரும் என்றும் சிறுபான்மைத்தமிழ் மக்கள் தங்களாலான ஆதரவைஇவ்வியக்கத்திற்குத் தர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். செல்லையா, ஆ. குலேந்திரம், எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினுர்கள்.

## விவசாயி தற்கொலை

சாவகச்சேரி, வெள்ளி

மனஸ்தாபம் காரணமாக ஒருவர்கிரிமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சாவகச்சேரித் கதாகுதியைச் சேர்ந்த கச்சாய் என்னும் பகுதியில் நேற்று நிகழ்ந்துள்ளது.

சின்னத்தம்பி கந்தையா என்னும் [40-வயது] விவசாயியேதற்கொலை செய்துகொண்டவராவர். இவருக்குஏழு பிண்ள்ளைகள் உண்டு இந்நப நேற்று தனம்கிளப்புப்பகுதியிலுள்ள வயல் ஒன்றில் அருவி வெட்டிவிட்டு மாலை வீடு திரும்பியபின்னரே தற்கொலை செய்து கொண்டாராம். இவர் உடனடியாகச் சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர். விசாரணை முடிவில்தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கிழக்கிலங்கை கடதாசிஆலை அந்நியசெலவாணி மீதமாக்கியது

கொழும்பு, வெள்ளி

சென்ற வருடத்தில் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் உள்ளூர் மூலப்பொருட்களான வைக்கோல்' தேவையற்ற கடதாசி சின மட்கலவை ஆகியவற்றை மற்றெந்தவருடத்திலும் பார்க்கக் கூடுதலான அளவு தனது உற்பத்திக்கனப் பயன் படுத்தியுள்ளது. இப் பொருட்களை இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாதாபனத்திடமிருந்தும் குளோரைனை பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் பெற்றுள்ளது.

இவ்விதம் இறக்குமதிப்குப் பதிலாக உள்ளூர்க் பொருட்களைப் பாவித்ததன் மூலம் 1966-ல் கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்ஏறத்தாள 70-லட்சம் ரூபாய் பெறுமதியான அந்நியசெலவாணியைச்சேமித்துள்ளது.

## பயிர்ச்செய்கை மாற்றம்

உடுவில், வெள்ளி

நீண்டகாலமாக புகையிலை ஒன்றையே முக்கியமாகக் கொண்டுவிளங்கிய இனுவில் கிராம விவசாய நிலங்கள் இப்பொழுது பயிர்மாற்றம் பெற்றுக் காட்சியளிக்கின்றன. உருளைக்கிழங்குப் பயிரும், பம்பாய் வெண்காயப் பயிரும்இப்பொழுது இப்பகுதிகளை முற்றுக்கையிட்டுள்ளன. 1963-64ம்வருடக்கால போகத்தில் முதல் முதலாக அரைப்பபிப்பு நிலத்தில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குப்பயிர் இப்பொழுதுசுமார் ஐம்பது ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது.

## "யாழ்.கனிஷ்ட தொழில்நுட்ப கல்லூரியைத் தரமுயர்த்துக"

### கல்விமந்திரிக்கு கோரிக்கை

வெள்ளவத்தை, வெள்ளி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளைக் கூட்டம் திரு.கே. சிவபாதசுந்தரம் தலைமையில் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தரத்தை முன்னர் கல்வி அமைச்சர் வாக்களித்ததுபோல் சிரேஷ்டதொழில் நுட்பக்கல்லூரியாக தரமுயர்த்தும்படி கோரும் பிரேரணை யொன்று திரு. எம். சிங்கராயரால்கொண்டுவரப்பட்டு ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது.

கல்லூரிக் கட்டிடத்தில் மாணவர்களுக்கென்று இருந்து வாசிப்பதற்குத் தனியான தொரு நூல்நிலையக் கட்டிடம் அல்லது அறை ஒதுக்கப்படுவதுடன் நூல் நிலையப் பொறுப்பாளராக ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்று அதிபரைக்கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# இசைநாடகதிறனை வெளிநாடுகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்

## யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கு அரசாங்க அதிபர் யோசனை

யாழ்ப்பாணம், சனி

"ஒரே பாணியில் மீண்டும் மீண்டும் ஒரே கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மையமாக வைத்து நாடகங்களை அரங்கேற்றினுல் அதனுல் நாடகக்கலை வளர்ந்து விடாது. யாழ்ப்பாணத்திலுள்ள நாடக மன்றங்களும், நாடகக் கலைஞர்களும், தயாரிப்பாளர்களும் புதிய புதிய நாடகங்களைத் தயாரிப்பதில் முன்வர வேண்டும். சினிமா உத்திகள் நாடகத்துக்கு அப்பாற்பட்டவை. சினிமா உத்திகளை நாடகங்களில் கையாளுவதால்நாடகங்கள்வீழ்ச்சியடைகின்றன வேயன்றி அவை வளர்ச்சியடைகின்றன என நினைப்பது மடைமை. ரஷ்யா, அமெரிக்கா போன்ற நகரங்களிலுள்ள நாடக விற்பன்னர்களைப் பின்பற்றி யாழ்ப்பாணத் தமிழ் நாடகத் தயாரிப்பாளர்களும் நல்ல நாடகங்களைத் தயாரிப்பார்களேயானுல் யாழ்ப்பாணத்து நாடகங்களுக்கு நல்ல எதிர்காலமுண்டாகும். யாழ்ப்பாணத்தில் இசையும், நடனமும் வளர்ந்துள்ள அளவுக்கு ஏன் தான் நாடகக் கலை வளர்ச்சியுறவில்லை என்பது பெரிய ஆச்சரியமாகவுள்ளது. எனது பதவிக் காலத்தில் நான் யாழ்ப்பாணத்தில் பார்த்த நாடகங்கள் அனைத்தும் ஒரே பாணியில் அமைந்துள்ளதை நன்கு காண முடிந்தது. இவைகளை விட்டு சிங்கள நாடகத் தயாரிப்பாளர்கள் பல தமிழ் நாடகங்களை மொழிபெயர்த்து சிங்களத்தில் மேடையேற்றுவது போல தமிழ் நாடகத் தயாரிப்பாளர்களும் முன்வந்து சிங்கள, ஆங்கில நாடகங்களை தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றினுல் பரத நாட்டியக் கலை போல யாழ்ப்பாணத் தமிழ் நாடகங்களும் உலக அரங்கில் முன்னணி வகிக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை".

மேற்கண்டவாறு நேற்று நடைபெற்ற திருநெல்வேலி கிழக்கு வாலயம்மன் ஜனசமூக நிலையத்தின் 24-வது ஆண்டு விழாவையும், கலாஜோதி நாடக மன்றத்தின் 6-வது ஆண்டு விழாவையும் முன்னிட்டு நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் திரு. அபயசேகரா நல்லூர் சட்டநாதர் கோவிலிலிருந்து மேளவாத்தியங்களுடன் விழா அரங்கிற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். நல்லூர் கிராம சபைத் தலைவர் திரு. கி. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. அபயசேகரா மேலும் பேசுகையில் யாழ்ப்பாணத்திலுள்ள இசைக் கலைஞர்கள் திருச்சி, மதராஸ் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமது இசைத் திறனை அங்கு காட்டுவதன் மூலம் நம் நாட்டின் சிறப்பை அங்கு வெளிப்படுத்த முடியுமென்றும், அதே வேளையில் அங்குள்ள தரமான நாடகக் கலைஞர்களிடம் நாடகம் பற்றிய நுணுக்கங்களையும் கற்று வந்தால் இங்கு தரமான பல நாடகங்களை மேடையேற்ற முடியும், இதனுல் பல கலைகளும் இங்கு வளருமேயன்றி எந்தவித நஷ்டமும் மேற்படாதாகையால் சகல கலைஞர்களும் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

கலையரசு க. சொர்ணலிங்கம் பேசுகையில், ஒழுக்கம் உள்ள இடத்தில் தான் பூரண வளர்ச்சியுண்டென்றும், சமூகத்திலுள்ள குறைபாடுகளை மக்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்த நாடகம் ஒரு சிறந்த சாதனம் என்றும் குறிப்பிட்டார். புலவர் செல்வி க. பூரணம் பேசுகையில் கலைஞர்களுடைய படைப்பு பொழுது போக்கிற்காக மட்டும் அமையக்கூடாதென்றும், மக்கள் மனதையும் பண்பாட்டையும் திருத்தக் கூடியதாகவும் விவசாயம் கைத்தொழிலை ஊக்கப்படுத்தக் கூடியதாகவும் கலை அமைதல் வேண்டுமென்றும், கலையினுல் மக்களைத் திருத்துவது மிகச் சுலபமென்றும் குறிப்பிட்டார்.

திரு. க. சி. குலரத்தினம் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தளையசிங்கம், திடீர் மரண விசாரணை அதிகாரி. திரு. எஸ். கனகரத்தினம், திரு. தேவன் யாழ்ப்பாணம் ஆகியோரும் பேசினர்.

கலை நிகழ்ச்சிகளில், பரத நாட்டியம், இன்னிசை, கலாஜோதி நாடக மன்றத்தாரின் 'இலட்சிய வீரன்' வரலாற்று நாடகம், அரியாலை நாடகமன்றத்தாரின் 'வா கொப்பரிட்டை' நகைச்சுவை நாடகம் ஆகியவையும் இடம் பெற்றன.

[ந. நி.]

## வானெலிப்பெட்டி எங்கே?

மாவிட்டபுரம், வெள்ளி

பளை வீமன்காமம் சனசமூகநிலையத்திற்கென காங்கேசன்துறைப் பட்டினசபையால் இலவசமாக வழங்கப்பட்ட வானெலிப்பெட்டியைக்கடந்த பல மாதகாலமாகக் காணவில்லையாம். இதனுல் அதிருப்தி அடைந்த வரியிறுப்பாளர்கள் பலர் பட்டின சபைக்கும், பொலிசிற்கும் செய்த புகார்களைத் தொடர்ந்து இவ்விஷயம் பட்டினசபையால் காங்கேசன்துறைப் பொலிசாரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிசார் இதுசம்பந்தமாக இப்பொழுது புலன் விசாரணை செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையிலிருந்து நமதுநிருபர் கா. யோகநாதன் எழுதுவது

# பிச்சைக்காரர் பகுதிக்கு எட்டிப்பார்க்காதபிரசாரம்

## தேர்தல்தினம் நெருங்க நெருங்க அதிகரிக்கும் விறுவிறுப்பு

## "இராவணன்பெயரில் பெருமைகொள்ளும் தி.மு.கவினர் 'தாடகை'யைவெறுப்பதேன்"

சென்னை நகரில் எங்கும் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் கொடிகளும், வளைவுகளும், அபேட்சகர்கள், தலைவர்களின் படங்களும் அலங்கரித்துக்கொண்டிருக்கும் இந் நாட்களில் ஒரேயொரு இடத்தில் மட்டும் இந்தக் காட்சிகளைக் காணமுடியவில்லை. இதற்கு மாருக அங்கு பிச்சைக்காரர்களைத்தான் காணக் கூடியதாக இருக்கிறது. பிச்சைக்காரர்களுக்கும் இங்கு 'கியூ'தான். இந்தியாவின் பஞ்சத்தைப் பற்றிப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் இந்தப் பிச்சைக்காரரே எதிர்ப்பு அணிக்கு ஒரு பிரசாரக் கருவியாக இருப்பதாக எதிர்ப்பு அணியினர் கருதி இங்கு தேர்தல் பிரசார சுவரொட்டிகள், கழகக்கொடிகள் ஆகியவைகளை இங்கு கொண்டுவரவில்லைப்போலும்.

தேர்தல் பிரசாரத்தில் நேரத்துக்கொரு திருப்பம் ஏற்பட்டுவருகிறது. இதுவரை எந்தக் கட்சி மேடையிலும் தோற்றமளிக்காதிருந்த முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் 'தேனீயில் தி. மு. க. அபேட்சகரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசினூர். காங்கிரசுக்காக பிரசாரம்செய்து வரும் பெரியார் ஈ. வே. ராமசாமியை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் கண்டித்திருக்கிறூர். ஒரு பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியிலேயே முதலமைச்சர் பெரியாரைக் கண்டித்திருக்கிறூர். இதேசமயம் பிரசாரக் கூட்டமொன்றில் முன்னுள் நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் பெரியாரைக் கண்டித்திருக்கிறூர்.

''இராவணன்'' என்று யெர் சூட்டிக்கொள்வதில் பெருமையடையும் திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் தங்கள் வீடுகளில் பெண்களுக்கு ''தாடகை'' என்று பெயர் சூட்டிக்கொள்ள ஏன் தயங்குகிறூர்கள் என்று திரு. பக்தவத்சலம் ஒரு கூட்டத்தில் கேட்டார். ராஜாஜி ஒரு கூட்டத்தில் பேசுகையில் எதிர்ப்பு அணிக்கு அளிக்கும் வாக்கு சத்தியம் என்ற சந்நிதியில் செய்யும் அர்ச்சனையாகுமென்று கூறியிருக்கிறூர்.

கட்சிமேடைகளில் எதிர்க்கட்சியினரை, தாறுமாருகத் தாக்கும் இந்தவேளையில் மதுரையில் ஒரு அதிசயம் நடந்திருக்கிறது. மதுரையில் ஒரே தொகுதியில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்கள் ஒரேமேடையில் தோன்றி தங்கள்கொள்கைகளை எடுத்துவிளக்கி மக்களிடம் ஒட்டுக்கேட்டுள்ளார்கள்.

மதுரை பாராளுமன்றத் தொகுதிக்கு காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் எஸ்.சின்னக்கருப்பதேவர், இடதுசாரி கம்யூனிஸ்ட் சார்பில் போட்டியிடும் பி. ராமமூர்த்தி, ஜனசங்கம் சார்பில் போட்டியிடும் டி.கே. துரைசிங்கம் ஆகிய மூவருமே ஒரே மேடையில் தோன்றினர்.மதுரை ஜூனியர் சேம்பர் சார்பில் இக் கூட்டம் நடைபெற்றது.

மதுரையில் இப்படி ஒரு அதிசயம்திடீரென்று தோன்றிய போதிலும், நாளுக்கு நாள் பலாத்கார சம்பவங்கள்மீண்டும்தலைதூக்கிவருகின்றன். பரங்கிமலையில்கடத்தல் சம்பவமொன்றும் நடந்திருக்கிறது.சைக்கிள் ஊர்வலத்தில் கலந்து கொள்ள தாமதித்துவந்த 3 தி.மு.க. வினரை, அடித்து காரில் சிலர் கடத்திச்சென்றுவிட்டதாக தி. மு. க. தலைவர் என்.வி. நடராஜனுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அம் மூவரின் விபரங்கள் தெரியவில்லை. என். வி.நடராஜன் திரும்பி வரும் பொழுது சிலரால் பயமுறுத்தப்பட்டிருக்கிறூராம்.

பெரியகுளம் தொகுதியிலுள்ள முஸ்லிம் வீடுகளுக்குப் பகலிலும் இரவிலும் கற்கள் வீசப்படுவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. உள்துறை மந்திரி கக்கன் இத் தொகுதிக்கு வந்த பொழுதும் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது. தேவதனப்பட்டி என்னும் கிராமத்திலும் பொன்னையா என்ற தி.மு.க.வாலிபர் பலமாகத் தாக்கப்பட்டாராம். இச்சம்பவத்தை யொட்டி காங்கிரஸார் கொடுத்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் சாகுல் என்பவரைக் கைது செய்துள்ளனர். இக் கிராமத்தில்பெருமாள் என்ற வாலிபரும் தாக்கப்பட்டார். பெரியகுளம் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### எம்.ஜி.ஆர். படங்கள் கிழிக்கப்பட்டன

பல்லாவரம் மார்க்கட்டில் உள்ள கழகக் கொடியையும் புரட்சி நடிகரின் படங்களையும் சிலர் கிழித்தெறிந்து விட்டனர். இதுசம்பந்தமாக எம்.ஜி. ஆர். பிக்சர்ஸ் வீரப்பன். இன்ஸ்பெக்டர் ஜெனரல் அருளை சந்தித்து புகார் செய்துள்ளார்.

பரங்கிமலைக்கு சைக்கிள் ஊர்வலம் நடத்த தி. மு. க. வினர் ஒரு வாரத்திற்கு முன்பே பொலிஸாரிடம் அனுமதி பெற்றிருந்தனர். ஆனல் காங்கிரஸார் அனுமதி பெருமல் போட்டிஊர்வலம் நடத்தினர். ஊர்வலத்தின்மீது வீசப்பட்ட கற்களை எடுத்து 'இதோ எங்களைத் தாக்கிய காங்கிரஸாரின் கற்கள்' என்று பிரசாரம் செய்து வருகின்றனர் தி.மு. கவினர்.

சோழதுங்கபுரம் தொகுதியைச் சேர்ந்த பெருமாள் ராஜபேட்டையில் தி. மு. கழகத்தைச்சேர்ந்த சம்பத் என்பவர் கத்தியால் குத்தப்பட்டு, அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பத்தின் தாயாரும் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். ஆஸ்பத்திரிக்கு மாஜிஸ்திரேட் சென்று மரணவாக்கு மூலம் பதிவு செய்தார். இப்படியாகவே தினமும் பலாத்காரச் சம்பவங்கள் எங்கும் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. கருணுநிதி இன்று தேர்தல் பிரசாரத்துக்காக காஞ்சிபுரம் சென்றுள்ளார். பல தொகுதிகளில் சூருவளி சுற்றுப்பிரயாணம் செய்யத் திட்டமிட்டுள்ளார். நேற்று அவர் நடித்த 'காகிதப்பூ' என்ற நாடகம், பார்க்பேர் கண்காட்சியில் நடந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் நாடகத்தைப்பார்க்க வந்திருந்தனர். கருணுநிதி இதில் காங்கிரஸ் காரராக கதர் அணிந்து நடிக்கிறூர். தி.மு.க. கொள்கையை விளக்கும் நாடகம் இது.

### காங்கிரஸ் அளித்த பரிசுகளா?

நேற்று அவர் நாடக ஆரம்பத்தில் பேசும்போது கூறியதாவது — இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 150 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 'காலித்தனம் செய்தால் சுடமாட்டோமா' என்று காமராஜர் கேட்டிருக்கிறூர். பொள்ளாச்சியில் ஒரு சிறுவன் பெரியவரோடு பாதையில் செல்லும் போது சுடப்பட்டான். அந்தச் சிறுவன் என்ன காலித்தனம் செய்தான். ஆரணியிலே ஒரு தாயுடன் சென்ற குழந்தை குழாயடியில் சுடப்பட்டு இறந்தது. இப்படி சிறுவர்களைக்கொலை செய்த ஆட்சியை தாய்மார்கள் சும்மா விடுவார்களா? அண்ணுமலையில் படிக்கும் மாணவன் ராஜேந்திரன், அதுவும் ஒரு பொலிஸ்காரனின்மகன் மற்ரெருரு பொலிஸ்காரனுல் சுடப்பட்டு மாண்டான்- அம் மாணவன் கொள்ளையடித்தாஞ? கொலை செய்தாஞ? உரிமைக்காகப் போராடினுன். தாய்மொழிக்காகமுன் வந்தான். அவனுக்குக் கிடைத்த பரிசு துப்பாக்கிக் குண்டு. இதற்கெல்லாம் பெயர் காலித்தனமா?

பொன்மலை, திருச்சி ரயில்வே தொழிலாளர் சங்கம், தேர்தல்நிதியாக 4000 ரூபா தி. மு. கழகத்திடம் நேற்று சமர்ப்பித்த இப்பணத்தை பொருளாளர் கருணுநிதியிடம் அச்சங்கத்தினர் கொடுத்தனர். தி. மு. கழக நிதிக்கு பணம் சேர்ந்து கொண்டிருக்கிறது. நேற்று ஒரு கூட்டத்தில் வழக்கறிஞர் நாராயணசாமி முதலியார், 1001 ரூபாவை திரு. நெடுஞ்செழியனிடம் கையளித்தார். அதே கூட்டத்தில் தேர்தல் நிதிக்காக கொடுக்கப்பட்ட மாடப்புரு ஒன்று 11 ரூபாவிற்கு ஏலத்திற்கு விடப்பட்டது. இது தவிர சிறுவர்கள் பகல் நேரங்களில் உண்டியல்களுடன் சென்று நிதி சேர்க்கின்றூர்கள். அவர்கள் செல்லும் போது 'அண்ணு வாழ்க' என்று கோஷமிட்டுக் கொண்டு செல்கின்றனர். இது நடப்பது சென்னையில் போக்குவரத்து அதிகமாக வுள்ள மவுண்ட் ரோட் வீதியில் தான்.

### வெளிநாட்டு நிருபர்கள்

தமிழகத் தேர்தல் செய்திகளைப் பற்றி வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் அதிக அக்கறை காண்பிக்கின்றன. நியூ யோர்க் டைம்ஸ் நிருபர் நேற்று கருணாநிதியின் 'காகிதப்பூ' நாடகத்திற்கு வந்திருந்தார். தேர்தலைப் பற்றி எழுதி வருவதாக அவர் தெரிவித்தார். கேரளத்தில் காங்கிரஸை ஆதரித்து வெளிவரும் நாளிதழான 'மாத்ருபூமி' பத்திரிகையில் காங்கிரஸிற்கு மாருக எழுதப்பட்டிருக்கும் கட்டுரை இங்குள்ள காங்கிரஸ் வட்டாரத்தில் அதிருப்தியைக் கொடுத்துள்ளது. அக்கட்டுரையில் எழுதப்பட்டுள்ளதாவது:

தி. மு. கழகத்தின் அறைகூவலை அலட்சியப்படுத்த காங்கிரஸ் தயாராயில்லை. தமிழ்நாட்டில் எங்குநோக்கினும் கட்சிகளின் கொடிகளும் சின்னங்களும் காணப்பட்டாலும் அதிகமாகத் தென்படுவது தி. மு. கழகக் கொடிதான். ஊர்வலங்கள் கூட கழகத்தவருடையது தான் அதிகமானவை. அண்ணுதுரையின் தேர்தல் கூட்டைப் பற்றி பாராட்டி பேசுகிறூர்கள்.

தி. மு. கழகத்தின் தலைவர் அண்ணுதுரையை தோற்கடிக்கும் ஆற்றல் திரு. குருமூர்த்திக்கு இல்லை என்று தான் யாவரும் நம்புகிறூர்கள் என்றும், அதில் எழுதப்பட்டிருக்கிறது.

### பெரியார் பற்றி பக்தவத்சலம்

பெரியார் ராமசாமி மற்ரெருபக்கத்தில் காங்கிரஸுக்குதலையிடியைக் கொடுத்து வருகிறூர். பெரியாரைப் பற்றி முதல் அமைச்சர் பக்தவத்சலமே கவலைப்படுகிறூர். புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'கணையாழி' என்ற இதழில் முதல் அமைச்சர் தன்மனதில் உள்ளதை வெளிக்காட்டியுள்ளார். பெரியார் காங்கிரஸிற்கு ஆதரவு அளித்து வரும் நோக்கம் என்ன? என்று நிருபர் கேட்டதற்கு அவர் கீழ்க்கண்டவாறு பதிலளித்துள்ளார். ''சுய நோக்கம் தான் பெரியாரை யார் மதிக்கிறூர்கள்? இராமசாமிநாயக்கர் ஆதரவு தருகிறூரென்றுல் கிடைக்கக் கூடிய 10-20 ஒட்டுகளும் கிடைக்காமல் போய்விடும். சில மூளையில்லாதகாங்கிரஸ்காரர்கள் கட்சிக் கூட்டத்திற்குஅவரைப் பேச அழைக்கின்றூர்கள். அதுவும் காசு கொடுத்து! காங்கிரஸ் பெரிய சமுத்திரம் மாதிரி அதில் எல்லாம் இருக்கும்''.

இதைப் பெரியார் அறிந்தால் என்ன செய்வாரோ? நல்ல காலம் பெரியார் சென்னை நகருக்குஅடிஎடுத்து வைக்கவில்லை. சென்னை நகருக்கு அவர் வருவதைகாங்கிரஸாரில் பலர் விரும்பமாட்டார்கள் என்பது உண்மை.

இத்தேர்தலில் குறிப்பாக தமிழ்நாட்டில் மாணவர்கள் அதிகம் பங்கெடுத்திருக்கிறூர்கள். இதற்குக் காரணம் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நடந்த துப்பாக்கிப்பிரயோகச் சம்பவங்களே. இம்மாதம் 11-ந் திகதி தமிழ்நாடு முழுவதும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்தி எதிர்ப்பு அணியினருக்கு ஆதரவு தேட மாணவர்கள் திட்டமிட்டுள்ளனர். சென்னையில் ஊர்வலம் நடத்த பொலிஸ் அதிகாரி அனுமதி மறுத்துள்ளார். தமிழ்நாடு தலைமைப் பொலிஸ் அதிகாரியிடம் மாணவர்கள் அனுமதி கேட்டுள்ளனர். சென்னை சர்வகலாசாலை மாணவர்கள் சங்கத் தலைவர் டி. நடராசன் 11-ந் திகதி கல்லூரி மாணவர்களும், பள்ளிக்கூட மாணவர்களும் ஊர்வலம் நடத்துவார்கள் என்றும் ஊர்வலத்தின் முடிவில் பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும், மாணவர்கள் கோரிக்கையை ஏற்கும் கட்சிக்கு ஆதரவளிப்பதென்றும் தெரிவித்துள்ளார். மாணவர்களின் எந்தக் கோரிக்கையையும் ஏற்கத் தயார் என எதிர்ப்பு அணியினர் தெரிவித்துள்ளதால், மாணவர்களின் ஆதரவு எதிர்ப்பு அணிக்குத்தான் கிடைக்கும்.

### இலவச உணவுக்கு அரிசி இல்லை

சென்னை நகரசபை பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுக்க அரசாங்கத்திடம் நகரசபை அரிசி கேட்டது. அதற்கு அரிசி இல்லையென அரசாங்கம் கைவிரித்துவிட்டது. சென்னை நகரசபைப் பள்ளிக்கூடங்களில் 35 ஆயிரம் மாணவர்களுக்கு இலவச சாப்பாடு போடப்பட்டு வருகிறது. மேலும் 15 ஆயிரம் மாணவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுக்க நகரசபை திட்டமிட்டது. இதற்கு அரிசி கொடுக்க அரசாங்கம் மறுத்துவிட்டது. புதிதாக வகுப்புகள் தொடங்கவேண்டாமென்றும் அரசாங்கம் நகரசபைக்கு அறிவித்துள்ளது. தேர்தல் நேரத்தில் அரசாங்கம் இப்படி நடந்துகொள்வது எதிர்ப்பு அணியினருக்கே சாதகமாக அமையும். சென்னையில் வாழும் பெற்ரேர்கள் இதனுல் வேதனையடைந்துள்ளனர்.

### நகரசபை வரவு-செலவுத் திட்டம்

தேர்தலுக்கு இன்னும் 5 நாட்கள் இருக்கின்றன. இதே சமயத்தில்தான் தி. மு. க. ஆதிக்கத்திலுள்ள சென்னை நகரசபை பட்ஜெட்டை இன்று வெளியிட்டது. இந்த பட்ஜெட் குறிப்பாக ஏழைமக்களுக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. சென்னையிலுள்ள மாணவர்களுக்கு சிலேட்டும் புத்தகமும் இலவசமாகக் கொடுப்பதற்காக 6 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து30 ஆயிரம் மாணவர்கள் பயனடைவார்கள். மாட்டுவண்டி, குதிரை வண்டி, ரிக்ஷோ வண்டி, ஆகியவைகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு தடவை வாங்கப்படும் வரி ரத்துச்செய்யப்பட்டுள்ளது. இதனுல் நகரசபைக்கு மூன்றரை லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படும். 200 ரூபா வரை வருமானமுள்ள தொழிலாளர்களுக்கு இனிமேல் தொழில் வரி கிடையாது. எஸ். எஸ். எல். சி. படிக்கும் மாணவர்களுக்கு விசேஷ கட்டணம் ரத்துச் செய்யப்படும். சென்னையில் ரோடு போட 76 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாரதியார், பாரதிதாசன், சிதம்பரனுருக்கு வெண்கலச் சிலை அமைக்க 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 200 முதல் 300 ரூபாவரை வருமானம் பெறுபவர்களுக்கு வரியாக விதிக்கப்பட்டிருந்த 6 ரூபாவை ஒரு ரூபாவாக குறைத்துள்ளனர்.

### ரூபாய்க்கு 3 படி அரிசி கிடைக்குமாம்

இங்கு எல்லாம் பட்ஜெட்டைப்பற்றியேபேச்சாக இருக்கிறது. ஏழைகளின் வரிப் பழுவை குறைத்த தி. மு. க. வினர் நிச்சயம்ஆட்சிக்கு வந்தால் 1 ரூபாவிற்கு 3 படி அரிசி வழங்குவார்கள் என்று பேசிக்கொள்கிறூர்கள். திரு. மு. கருணுநிதி நேற்று ஒரு கூட்டத்தில் பேசும்போது எதிர்ப்பு அணியினர் ஆட்சிபீடம் ஏறிய மறுநாள் ரூபாய்க்கு 3 படி அரிசி கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைக்காரர் பகுதிக்கு......

[6ம் பக்கத்தொடர்ச்சி]

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு நேற்றிரவு திரும்பிய தி.மு.க. தலைவர் என். வி. நடராஜன், தமிழ்நாட்டில் ஆட்சி மாறுவது உறுதி என்றுகூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் தான் பல பகுதிகளுக்கும் சென்றதாகவும் கிராமங்களில் உள்ள மக்களும் விழிப்புணர்ச்சியடைந்திருப்பதாகவும். எதிர்ப்பு அணியினர் மெஜோரிட்டி, பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்றும் தெரிவித்தார்.

## இராவணனும் தாடகையும்

டெல்லி மந்திரி அழகேசன் காஞ்சிபுரத்தில் பிரசாரம் செய்துவருகிறார். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் எத்தனைபேர் பட்டினியால் செத்தார்கள் என்று மந்திரி ஒரு கூட்டத்தில் கேட்டார். சென்னையில் முதல்மந்திரி பக்த வத்சலம் ஒரு கூட்டத்தில் பேசும்போது தி. மு. க.வின் பகுத்தறிவுக் கொள்கைக்கு ஒரு சூடு கொடுத்தார். தி. மு. க.வினர் தங்களுக்கு இராவணன் என்று பெயர் சூட்டுவதில் பெருமைபடுகிறார்கள் என்றும் ஆனால் அவர்கள் தங்கள் வீட்டிலுள்ள பெண்களுக்கு 'தாடகை' என்று பெயர் சூட்டி பெருமைப்படவில்லையேஎன்றும் முதல் மந்திரி கேட்டார்.

சென்னையில், டெல்லி மாஜி மந்திரி மொரார்ஜி தேசாய் எதிர்வரும் தேர்தலில் 4 மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வி அடையலாம் என்று கூறியுள்ளார். பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் கேரளாவில் காங்கிரஸ் நிச்சயம்தோற்றுவிடுமென்றும், ஒரிசா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஆகியவற்றில் காங்கிரஸ் தோல்வியடையலாம் என்றும், கூறினார், பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவீர்களா? என்று கேட்டபோது முதலில் தான் தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்று கூறினார்.

## கள்ளநோட்டு வதந்தி நோக்கம்

தேர்தலில் பணம் கொடுத்து ஓட்டுப்பெற காங்கிரஸ் முயற்சித்தால் அதை மாணவர்கள் தடுக்கவேண்டும் என்று மாணவர் தலைவர் ரவி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். மாணவர்களும் பெற்றோர்களும் எதிர்ப்பு அணிக்கே ஆதரவளிக்கவேண்டுமென்றும் மீண்டும் காங்கிரஸ் வந்தால், ஹிந்தி திணிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். மதுரையில் 5 ரூபா கள்ள நோட்டு அடிக்கப்பட்டுள்ளதாக வதந்தி பரப்பப்பட்டுள்ளதால், கடைகளிலும், பொது இடங்களிலும் 5 ரூபா நோட்டை வாங்க மறுக்கிறார்கள். மதுரையில் காங்கிரஸார் வாக்காளருக்கு 5 ரூபா வீதம்கொடுக்கப்படுவதாக அறிந்த எதிர்ப்பு அணியினர் கள்ள நோட்டு வதந்தியைப் பரப்பிவிட்டனர். இதனால் வாக்காளர்கூடப் பணம் வாங்க மறுக்கின்றனர்.

காங்கிரஸார் தரும் பணம் நமது வரிப்பணம்தான். ஆதலால் அவர்கள் தரும் பணத்தை வாங்கிவிட்டு, எதிர்ப்புப் அணியினருக்கு ஓட்டுப் போடுங்கள். இப்படிப் பல பகுதிகளிலும் பிரசாரம் செய்யப்பட்டுவருகின்றது. இதனால் ஓட்டுக்காகப்பணம் கொடுக்கச் சிலர் அஞ்சுகின்றனர்.

## தனது குருபற்றி சிவாஜிகணேசன்

சென்னையில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் நடிகர் சிவாஜி கணேசன் பேசினார். பெரியார் இராமசாமி தான் தனக்கு அரசியல் குருவென்றும்,, தி. மு. கழகத்திலிருந்து தானே வெளியேறியதாகவும், கலைஞர்கள் அரசியலில் ஈடுபடுவது நல்லதென்பதை அறிந்து அரசியலில் பிரவேசித்ததாகவும் கூறினார். கலையை வளர்ப்பதற்கு காங்கிரஸ் ஏராளமாக செலவு செய்வதால் அக் கட்சியை ஆதரிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். சிவாஜியைப் பார்ப்பதற்கு பெருந்திரளான கூட்டம் வந்திருந்தது. சிவாஜி பேசி முடிந்ததும் கூட்டம் கலைய ஆரம்பித்தது.

திருவொற்றியூரில் நடந்த தி. மு. க. கூட்டத்தில் நேற்றிரவு கலாட்டா நடந்தது. தி. மு. க. சார்பில் போட்டியிடும் அ. பொ. அரசுவை ஆதரித்து இக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மின்சார விளக்குகள் உடைக்கப்பட்டன. பாதியில் கூட்டம் முடிவடைந்தது. தடிகளுடன் மேடை நோக்கிவந்த சில காலிகளால் கூட்டம் குழப்பப்பட்டது.

# 'அடக்குமுறை நடவடிக்கை என்றால் தேர்தலில்மறியல்''

தேர்தல் தினத்தன்று பொலிஸார் வாக்காளர்மீது அடக்குமுறை பாவித்தால், மறியல் போராட்டம் நடத்த திட்டமிட்டிருப்பதாக கருணாநிதி இன்று தெரிவித்தார். தேர்தலுக்குமுதல் நாள் இரவு, தி. மு. க.ஆதரவாளர்களின் கையில் மையைப் பூசி, அவர்களின் ஓட்டை செல்லுபடியாகாமல் செய்ய ஆட்சியாளர் திட்டமிட்டிருப்பதாகவும், அப்படி எதுவும் நடந்தால் வாக்காளர் அதிகாலையில் சென்று தேர்தல் அதிகாரியிடம் முறையிடும்படியும் திரு. கருணாநிதி கூறியுள்ளார். பொதுமக்களை பொலிஸார் தாக்கமுற்பட்டால், தன் வெற்றியூர்வலத்திற்குப் பதிலாக பிணஊர்வலம் தான் நடைபெறுமென்றும், இத் தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்படாவிட்டால், இன்னும் நூறு வருடங்களுக்கு ஜனநாயகம் தலைதூக்காதென்றும் கூறினார்.

இங்கு இரட்டைத்தட்டு பஸ்கள் இல்லாதபடியினால், வீதிகளுக்கு குறுக்கே மிகவும் பதிவாக, கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதான வீதியான மவுண்ட்ரோட்டில் மட்டும் வீதிக்கு குறுக்கே கொடிகள் வைக்கப்படவில்லை. காரணம் இது விசாலமான வீதி. இது தவிர உயர்நீதிமன்ற பகுதியிலும். இரண்டொரு இடத்தைத் தவிர கொடிகள் காணப்படவில்லை. ராஜா அண்ணாமலை மன்றம், சட்டக் கல்லூரி ஆகிய பகுதிகளிலும், கொடிகள், வளைவுகள், சுவரொட்டிகள் கிடையா.

இவற்றிற்குபதிலாக இங்கே நூற்றுக்கணக்கான பிச்சைக்காரர்களைத்தான் காண முடிகிறது. இங்கே பிச்சைக்காரர்கள்கூட கியூவில் இருந்துதான் கையேந்துகிறார்கள். பல நாடுகளின் வங்கிகள் இருக்கும் பகுதியில், மாதா கோவிலுக்கு எதிரே நூற்றுக் கணக்கான பிச்சைக்காரர்கள் கியூவில் காணப்படுகின்றனர். இவர்கள் படுப்பது, சமைப்பது, சாப்பிடுவது எல்லாம் நடைபாதையில்தான். நடைபாதை முழுவதும் பிச்சைக்காரர் குடும்பங்கள்தான்.

வங்கிகளுக்குப் காசு மாற்ற வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு இந்தப் பிச்சைக்காரர்களால் பெரும் தொல்லை. இந்தியாவில் பஞ்சம் என்பதை வெளிநாட்டுப் பிரயாணிகள் இக்காட்சிமூலம் காணக்கூடியதாயிருக்கிறது. மூலைமுடக்குகளிலெல்லாம் கொடி கட்டிய எதிர்ப்பு அணியினர் குறிப்பாக தி. மு. க.வினர் இப்பகுதியில் மட்டும் கொடிகள் கட்டாத காரணம் என்ன? பந்தல் போடாத காரணமென்ன? ஒருவேளை இந்தப் பிச்சைக்காரர் 'கியூவே' எதிர்ப்பு அணியினருக்குப் போதிய பிரசாரத்தைத் தேடிக் கொடுக்கும் என்று எண்ணியிருப்பார்களோ!

## கள் வேண்டுவோருக்கு ஆதரவாளர் யார்?

மதுபானத் தடை விதிக்கப்பட்டிருக்கும் பொழுதே இங்குஇவ்வளவுபலாத்காரச் செயல்கள் நடைபெறுகிறதென்றால், மதுபானத் தடையில்லாமலிருந்திருந்தால் சொல்ல வேண்டியதில்லை. இங்கு மற்றும் சில நாடுகளைப்போல், ஓட்டுக்காக, கள்ளுச் சாராயம் கொடுக்கும் வழக்கம் கிடையாது. அதனால் கொஞ்சக் காசு அபேட்சகர்களுக்கு மிச்சம். இங்கு மதுபானத் தடையிருந்த போதிலும், மதுபானக் கடைகளுக்குக் குறைவில்லை. வெளிநாட்டிலிருந்துவரும் பிரயாணிகள், பெர்மிட் எடுத்து உயர்தர மது வாங்கலாம். இலங்கையிலிருந்து வருபவர்களுக்கு 6 யூனிட் வாங்க பெர்மிட் கிடைக்கும். பியர், பிரண்டி, விஸ்கி, ஜின் போன்ற வெளிநாட்டுக் குடிவகைகள் வாங்கலாம். இத்தேர்தலில் மதுபானத் தடையை நீக்கக் கோரி சில தொகுதிகளில் 'கள் வேண்டுவோர் கழக'மும் போட்டியிடுகின்றது. ஆனால் அவர்கள்கூட வாக்காளர் மத்தியில் பிரசாரம் செய்தே வாக்குக் கேட்கின்றனர். சிலர் இரகசியமாக சாராயம் காய்ச்சியபோதும் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்கிறார்கள். இவர்களின் ஆதரவு சிலசமயம் கள் வேண்டுவோர் கழகத்திற்குக் கிடைக்கலாம்.

திருவொற்றியூரில் பழம்பெரும் காங்கிரஸ்காரரான பி. பூவேலு என்பவரும், அவருடன் 119 பேரும் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டனர். இன்று காங்கிரஸ் காந்தியடிகளின்பாதையிலிருந்து விலகி, பணக்காரர்களின் குகையாக மாறிவிட்டதால், தானும், மற்றும் 119 பேரும் வெளியேறுவதாக மண்டலக் காங்கிரஸ் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

# சத்தியம் என்ற சந்நிதியில் செய்யும் அர்ச்சனை -ராஜாஜி

காங்கிரஸிற்கு எதிராக போடும் ஒவ்வொருவோட்டும் சத்தியம் என்ற சந்நிதானத்தில் செய்யும் அர்ச்சனையாகும் என்று ராஜாஜி இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார். தேர்தலின் பின் சென்னையில் யோக்கியமான நிர்வாகம் ஏற்படுவது நிச்சயமென்றும், எதிர்ப்பு அணி காங்கிரஸை தூக்கிஎறிந்து விடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் தொகுதி [காமராஜர் தொகுதி]யில் சின்னதாளம்பட்டியில் தி. மு. கழகத்தவரை சிலர் அரிவாளால் வெட்ட முயன்றுள்ளனர். அரிவாளை வீசியதால் ஒருகாரின் கண்ணாடி உடைந்தது. காமராசரை எதிர்த்து மாணவர் தலைவர் வழக்கறிஞர் சீனிவாசகன் போட்டியிடுகிறார். அர்ச்சனாபுரம் என்ற ஊரில் 6 தி. மு. கழகத்தினர் இன்று தாக்கப்பட்டனர். கழகக்கொடிகள் தூக்கப்பட்ட வீடுகளை சில காலிகள் கொளுத்தினர்.

# 'பெரியார் சொற்படி காங்கிரஸ் நடக்காது'' — டி.டி.கே

சென்னையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, அரசாங்க ஊழியர்களின் செய்கையினால் ஆட்சிக்கு கெட்ட பெயர் வருகிறது, என்று பேசியது, அரசாங்க ஊழியர் மனதைப் புண்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. பொலிஸ்காரரை விட்டு விவசாயிகள் வீட்டில், அரிசியைப்பறித்துக் கொண்டுவந்தால் ரூபாவிற்கு 3 படி போடலாம் என்றும்] அவர் பேசியுள்ளார். பெரியார் ராமசாமியையும் கிருஷ்ணமச்சாரி நேற்று தாக்கிப் பேசினார். பெரியாரின் தகப்பனார். சொத்துக்களை கோவிலுக்கு எழுதிவைத்த ஆத்திரம் பெரியாருக்குத் தீரவில்லையென்றும், பெரியாரின் சொற்படி காங்கிரஸ் நடக்காதென்றும் அவர் கூறினார்.

---

யாழ்ப்பாணத்தில்

# உப உணவுப்பொருள் உற்பத்திபற்றி ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவிவரும் உப உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு பற்றியும், அவைகளில் யாழ்ப்பாணத்தில் எந்தெந்த உணவுப்பயிர்களை உற்பத்திசெய்ய முடியுமென்பது பற்றியும் நேற்று முன்தினம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற உணவு உற்பத்தி மகாநாட்டில் ஆராயப்பட்டது.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் மேலதிக மாவட்ட அதிபர் திரு. சபாரத்தினம், காரியாதிகாரிகள், பொதுஜனத் தொடர்பு அதிகாரி, உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் உட்பட அநேக முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். [ந. நி.]

---

# வீடு உடைத்து ரூ. 15,000 திருட்டு?

பருத்தித்துறை. வியா.

விநாயக முதலியார் வீதியைச் சேர்ந்த ஒருவருடைய வீட்டில் பட்டப்பகலில் எவரும் இல்லாத நேரத்தில் திருடர் கோஷ்டியொன்று உள் சென்று வீட்டுக்கதவை உடைத்து அதற்குள் இருந்த 15,000 ரூபா பெறுமதியான ரொக்கப்பணத்தையும் நகைகளையும்திருடிச் சென்றுவிட்டதாக பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

வீட்டுச் சொந்தக்காரர்களான வி. கணபதிப்பிள்ளை தும்பளைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் படிப்பிக்கச்சென்ற சமயம் இத் திருட்டு நடைபெற்றதாம்.

---

# தி. மு. க. மேடையில் கி. ஆ. பெ. பிரசாரம்

சின்னமனூரில், தேனீ சட்டமன்ற தி. மு. க. உறுப்பினரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் கி. ஆ. பெ. விஸ்வநாதம் கலந்துகொண்டார். இவர் முதல் தடவையாக தி. மு. க. மேடையில் ஏறி பிரசாரம் செய்துள்ளார். பரங்கிமலையில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து நடிகர் கே. சாரங்கபாணி நேற்று பிரசாரம் செய்தார். சிவாஜி கணேசனை பரங்கிமலைக்கு கொண்டுவர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதேவேளையில், சில கலாமன்றங்களும், ரஸிகர் சங்கங்களும், தலைவர் என்ற முறையில், பரங்கிமலைக்கு காங்கிரஸிற்காக பிரசாரம் செய்ய செல்லவேண்டாமென்று சிவாஜிக்கு அறிவித்துள்ளனவாம்.

— —

## நியமனங்கள்

அளவெட்டி, வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பதினைந்து ஆண்டுகளாக வயலின் இசையாரியராகக்கடமையாற்றிய திருமதி சிங்கராசா வீமன்காமம் ஆங்கிலபாடசாலைக்கும் மன்னார் பகுதி பாடசாலையில்கடமையாற்றிய செல்வி. கதிர்காமர் நாகம்மா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், நெல்லியடிப் பகுதிப் பாடசாலையில் கடமையாற்றிய திரு. பொன். தெய்வேந்திரம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும், இசையாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

---

சட்டக்கல்லூரி

## தமிழ்மன்றம்

கொழும்பு, வெள்ளி

இலங்கைச்சட்டக்கல்லூரி தமிழ்மன்றத்தினது வருடாந்த விவாதக் குழுத் தெரிவு கல்லூரி மண்டபத்தில் திரு. து. ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. மத்தியஸ்தர்களாக வழக்கறிஞர் சிவானந்தன் வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசாபண்டிதர் சேதுகாவலர் ஆகியோர் கடமையாற்றினார்கள் ''இருபதாம் நூற்றாண்டில் தமிழ்இலக்கியம் வளர்ச்சி அடைந்துள்ளது'' என்ற தலைப்பில் சுமர் 20 மாணவர்கள் காரமாக விவாதித்தார்கள். தெரிவு செய்யப்பட்டவர்கள் பின்வருமாறு: டீ. திருநாவுக்கரசு, [விவாதக் குழுத் தலைவர்] டி. எம். சுவாமிநாதன்- [உபதலைவர் பின்வருவோர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்கள் ஆர். தயாபரன் யு. எஸ் ஏ. மஜீட் எம். என் ஐயூப் மு. சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் யார் யார் மந்திரிகளாக பதவியேற்பர்?

## கருணாநிதி நிதிமந்திரி

## எம். ஜி. ஆருக்கு கலைத்துறை

### சென்னையில் இப்போதே புதியமந்திரிசபை பற்றிப்பேச்சு

— நமது நிருபர் யோகநாதன் —

சென்னை, பெப். 10

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு உத்தேச தி. மு. க. மந்திரி சபையில் கலைத்துறைப்பகுதி மந்திரிப் பதவி கிடைக்கும் என்று கோவையில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் இன்று தெரிவித்தார். அதுமட்டுமல்ல உத்தேச தி. மு. க. மந்திரி சபையில் யார் யார் மந்திரிகளாக இருப்பார்களென்பதையும் அவர் வெளியிட்டார். தலைவர் அண்ணாதுரை முதல் மந்திரியாக யாகவும், இரா நெடுஞ்செழியன் கல்வி மந்திரியாகவும், மு. கருணாநிதி நிதிமந்திரியாகவும், க. அன்பழகன் போக்குவரத்து மந்திரியாகவும் பதவியேற்பார்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவை மேற்கில் சட்டசபைக்குப் போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர் ஸ்ரீ கோவிந்தராஜாவை ஆதரித்து நடத்தப்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் போதே திரு. ராஜேந்திரன் மேற்கண்ட விபரத்தை வெளியிட்டார். மக்கள் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்கத் தயாராக இருக்கும் போது அமைச்சரவையை நாங்கள் அமைக்க ஆயத்தப்படுத்துவது இயற்கையே என்றும் அவர் தெரிவித்தார். நடிகர் ராஜேந்திரன் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்தி வருகிறார். சென்னையில் இப்பொழுது உத்தேச தி. மு. க. மந்திரிசபையில் இடம்பெறும் மற்ற மந்திரிகள் யார் என்பதே பேச்சாக இருக்கிறது. கடந்த முறை தேனீ தொகுதியில் போட்டியிட்டு 15,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ற நடிகர் ராஜேந்திரன் இம்முறை போட்டியிடவில்லை. மந்திரி சபையில் தான் இருக்கமாட்டாரென்றும் சாதாரண தொண்டனாகப் பணியாற்றப்போவதாகவும் நடிகர் ராஜேந்திரன் தெரிவித்தார் தி. மு. க தலைவர்களான மதியழகன், என். வி. நடராஜன், நாஞ்சில் மனோகரன், சிட்டிபாபு இவர்களில் யார் மந்திரிசபையில் இடம்பெறலாமென மக்கள் பேசிவருகிறார்கள்.

### அண்ணாபற்றி பி. டி. ராஜன்

தேர்தலுக்குப் பின் அமைக்கப்படவிருக்கும் அரசாங்கத்தின் தலைவராக திரு. அண்ணாதுரை வரலாம் என்று தமிழ்வேள் பி. டி. இராசன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்தார். அண்ணாதுரையின் பார்வை விசாலமானதென்றும். இந்திய அரசியலிலே அவர் ஒரு தலைவராகியுள்ளாரென்றும், அவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் தி. மு. க. மந்திரிசபை ஏற்படுமென்றும், அதற்கு ஆதரவு கொடுக்கப்போவதாகவும், இடதுசாரிகம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். தான் இறப்பதற்குள் அண்ணாதுரையின் ஆட்சியைக் காண ஆசைப்படுவதாக ராஜாஜி தெரிவித்துள்ளார். தேர்தலின் பின் தி. மு. க. ஆட்சி நடத்த போதுமான மெஜோரிட்டி எடுத்தால் தி. மு. க. தலைவர்களை மட்டும் கொண்ட மந்திரிசபையே அமைக்கப்படும் என்பது தெளிவாகிறது. தேர்தலின்பின் எப்படி நடந்து கொள்ளவேண்டும். என்பதுதனக்குத் தெரியும் என்று அண்ணாதுரை கூறியுள்ளார். ஆதலால் உத்தேசமந்திரிசபையில். எதிர்ப்பு அணியினருக்கும். அண்ணாதுரை இடங்கொடுப்பார் என்று இங்கு பேசப்படுகிறது.

### கூப்பன்களை ஒப்படைத்தார்

யாழ்ப்பாணம், சனி

திரு. எம். வி. ஆசீர்வாதம் ஜே. பி. தமது குடும்பத்தின் நான்கு அரிசிப் புத்தகங்களையும் கொழும்புத்துறைகிராம சேவையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

### ஏணஸ் ஜேர்மிஜின் இலங்கை விஜயம்

உடுவில், வெள்ளி

நான்காவது அகிலத்தின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான திரு. ஏணஸ்ஜேர்மிஜின் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இம்மாதம்15ம்திகதிவரை தங்யிருகிக்கும் இவர் புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் அங்கத்தவர்களுக்கு கொழும்பில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் சொற்பொழிவாற்றுவார்.

### புதிய நீதியரசருக்கு வரவேற்பு

கொழும்பு. வெள்ளி

புதிதாக சுப்ரீம்கோர்ட் நிதியரசராக நியமனம்பெற்றுள்ள முன்னாள் சொலிட்டர் ஜெனரல் திரு. தென்னகூன்இன்று நீதிமன்றத்துக்கு வந்தபொழுது குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா ஓய்வுபெறுவதால் அவர் இடத்துக்கு திரு. தென்னக்கூன் நியமிக்கப்பட்டார். உள்ளூராட்சிமந்திரி செனட்டர் திருச்செல்வம் உட்பட பலபிரமுகர்கள் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

அட்டோர்ணி ஜெனரல் திரு. அமீர் புதிய நீதியரசரை வரவேற்றுப் பேசுகையில் சுப்ரீம்கோர்ட்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள முதல் கண்டியர் அவர்என்று பாராட்டினர்.

### கார்த்திகைக் காய் முக்கொலை வழக்கு

மாவிட்டபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை 'கார்த்திகைக் காய்' முக்கொலை வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நேரம் போதாததால் மாஜிஸ்திரேட் விசாரணையை இம் மாதம் 13ந் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

யாழ்ப்பாணம், சனி

மண்டைதீவைச் சேர்ந்த ஐயாத்துரை சாம்பசிவமூர்த்தி என்பவரை கடந்த மாதம் கத்தியால்க்குத்திக் கொலைசெய்ததாகசந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட அதேஇடத்தைச்சேர்ந்த நால்வரையும் மீண்டும் இம்மாதம் 25-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரட்திரு. ரி. ஜே.ராஜரத்தினம்உத்தரவிட்டார். ந. நி.

# ஒருநபருக்கு அரைருத்தல் மா

## சுதந்திரபுரத்தில் மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

முல்லைத் தீவுக்கு அண்மையிலுள்ள சுதந்திரபுரம் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த மக்கள் சாப்பாட்டுக்கு மாவு கிடைக்காது கஷ்டப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்பட்டு, கூப்பனுக்கு மாவு வழங்கப்படும் திட்டம் அமுலுக்குவந்தபின்னர் சுதந்திரபுரத்தில் வாரந்தோறும் ஒரு நபருக்கு கூப்பனுக்கு அரை ருத்தல் மாவு மட்டுமே வழங்கப்படுவதாதச் சொல்லப்படுகிறது. இது தவிர வேறு உப உணவுப் பொருள்கள் அப்பகுதி மக்களுக்குக் கிடைப்பது அரிதாக விருக்கிறதாம்.

உப உணவுப் பொருள்களை குறைந்தளவு விநியோகம் செய்தாலும் மாவுகூடிய அளவு வழங்குமாறு சுதந்திரபுரம் குடியேற்றப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

### சுவீப்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| 25 E 0953 | 03 K 0122 |
| 08 T 0008 | 34 L 0933 |
| 29 R 0879 | 28 R 0541 |
| 17 Q 0457 | 18 B 0371 |
| 17 B 0451 | 26 M 0453 |
| 35 X 0929 | 22 S 0735 |
| 25 X 0826 | 28 N 0280 |
| 16 X 0082 | 02 C 0587 |
| 36 G 0625 | 24 W 0981 |
| 08 X 0490 | 25 S 0210 |
| 30 K 0300 | 25 A 0356 |
| 33 O 0370 | 33 H 0970 |
| 01 S 0428 | 24 E 0907 |
| 06 P 0334 | 26 P 0042 |
| 37 C 0502 | 01 J 0253 |
| 36 K 0007 | 15 L 0463 |
| 26 Z 0176 | 20 P 0734 |
| 22 B 0491 | 23 N 0498 |
| 30 E 0517 | 30 B 0630 |
| 16 O 0612 | 31 Y 0521 |
| 05 K 0658 | 24 A 0491 |
| 30 F 0301 | 10 Y 0521 |
| 29 T 0989 | 35 X 0068 |
| 16 K 0148 | 35 P 0383 |
| 13 S 0501 | 18 H 0860 |
| 19 R 0387 | 30 J 0261 |
| 15 V 0704 | 32 K 0314 |

### திரு. சிக்மறிங்கத்துக்கு புதிய பதவி

யாழ்ப்பாணம், சனி

இலங்கை மீன்பிடி இலாகா ஆலோசனைக் சபையின் அங்கத்தவராக யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரான திரு. ஜே. எஸ். சிக்மறிங்கம் மீன்பிடி அமைசரால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கும் இதன் அங்கத்தவராகக் கடமையாற்றுவார்.

சமூக சேவையாளரான திரு. சிக்மறிங்கம் யாழ்ப்பாணம் வரிக்கட்டுப்பாட்டுச்சபையின் அங்கத்தவ... றெண்டு மீனவர்களுக்கான சங்கத்தை முதன் முதலில் ஸ்தாபித்தவருமாவர் யாழ்ப்பாணம் கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கச் சமாஜத்தின் தலைவரான இவர் மேலும் யாழ்ப்பாணம் மரைன் நலவுரிமைச் சங்கம் சிறகு வலை மீன்பிடியாளர் சங்கச் சமாஜம், குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கம், கார்மல் கூட்டுறவுப் பண்டசாலை ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றுகிறார். [ந. நி[

# இந்திராவுக்கு மூக்கில் சத்திர சிகிச்சை

புதுடில்லி, பெப். 10

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, இன்று இங்குள்ள ஒரு வைத்தியசாலையில் தமது மூக்கில் சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அவரது மூக்கில் எலும்பு முறிந்திருப்பதாக எக்ஸ்ரே மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. அவரை இன்னும் சில தினங்களுக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்கும்படி டாக்டர்கள் கூறியுள்ளனர். அவர் துரிதமாக குணமடைந்து வருவதாகவும்அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் புவனேஸ்வரில் பிரதமமந்திரிமீது கல் வீசப்பட்டசம்பவம் குறித்து பூரண விசாரணையொன்றை நடத்த ஒரிஸ்ஸா அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது.

### கான்ஸ்டபிள், கி. சேவகர்மீது வழக்கு

மாவிட்டபுரம்,வியாழன்

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் கிராமசேவகர் ஒருவருக்கும் எதிராக ஒரு பெண்மணியால் தொடரப்பட்ட வழக்கில் கான்ஸ்டபிளுக்கு சம்மன்ஸ் வழங்கப்படாமையினால் நீதிபதி வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

இவ் வழக்கில் சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிளான அபயசிங்காஎன்பவர்சென்ற மார்கழி மாதம் 26ம் திகதி தனது. வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், தன்னை அடித்துக் காயப்படுத்தியதாகவும் ஒரு கான்ஸ்டபிள் மீதும் கிராம சேவகர் கே.அமிர்தலிங்கம் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டி உரும்பராயைச் சேர்ந்த மரகத வல்லி சிவஞானம் என்னும் பெண்மணி இவ் வழக்கை மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தாக்கல் செய்து உள்ளார்

வழக்கு எடுக்கப்பட்டதும் இரண்டாம் எதிரியான கிராம சேவகர் மட்டும் சமூகமளித்து இருந்தார். கான்ஸ்டபிளுக்கு சம்மன்ஸ் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படவே நீதிபதி அவருக்கு மீண்டும்சம்மன்ஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 2ம்திகதிக்கு ஒத்திவைத்தார். வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் திரு. அ. குமரகுருவும், கிராம சேவகர் சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜராகினர்.

# லியூ- ஷா- ஷீயை எதிர்ப்பது ஏன்?

வெள்ளவத்தை, வெள்ளி

ஒரு நாட்டில் முற்போக்கு வாலிபர் சங்கங்கள் மிகவும் பலம் வாய்ந்தனவாகவும் கட்டுப்பாடான்வையாகவும் இருத்தல் அவசியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் திரிபுவாதத்திற்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது. மக்கள் சீனக்குடியரசில் இன்று அதன் தலைவர் லியூ-தோ-ஷி தவறானபாதையில் அடியெடுத்துவைத்துள்ளார் ஆகவேதான்அவரை மா-சேதுங்கின் ஆதரவாளர்கள் பலமாக எதிர்க்கிறார்கள். அவர் திரிபுவாதத்தை நோக்கி அடியெடுத்துவைப்பதைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எதிர்க்கிறது.

இவ்வாறு வெள்ளவத்தை முற்போக்கு வாலிபர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. ஆர். செல்வச்சோதி பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 1959-ம் ஆண்டுமுதலே லியூ-தோ-ஷி திரிபுவாதத்தை வளர்க்கத் தலைப்பட்டாரென்றும் அப்போது அவரது கட்சி பலமாக இருந்ததால் தவறான அப்போக்கை எவரும் கண்டிக்க முடியவில்லையென்றும் அவர் மக்கள் கம்யூன் முறையை எதிர்த்ததுடன் கலாச்சாரப் புரட்சியில் பிற்போக்குக் கலாச்சாரத்தையும் ஆதரித்தார் அன்றும் கூறினர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org